தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

வைகாசி 1999 | இதழ் -2

"... சொந்த மண்ணிலும் கொடுமை, சென்ற இடங்களிலும் நித்தம் நித்தம் கொடுமையும் அவமானங்களும். கௌரவமாக வாழ நாம் கொடுத்து வைக்கவில்லையா? என்றைக்கு எம் மண்ணில் சுதந்திரமாக நாம் சீவிப்பது? ..."

-சனத்தின் குரல்-

# சிங்களப் படைக்கு தமிழ் இளைஞர்கள் திரட்டல் !

யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்கும் முயற்சியில் ஸ்ரீ லங்கா அரசு மும்முரமாக இறங்கியுள்ளது. இன்று சர்வதேச அளவில் ஸ்ரீ லங்கா இராணுவமானது தனிச் சிங்கள இராணுவம் என அம்பலப்பட்டுள்ள நிலையில் தமது இராணுவமானது அவ்வாறில்லை என நம்ப வைக்கும் முயற்சியின் ஒரு கட்டமாகவே தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் தமிழ் இளைஞர்களைக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவவும் தமிழீழத்தின் தளப்பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கு சிங்களப்படைகளுக்கு வழிகாட்டவுமான ஒரு தந்திரோபாயத் திட்டமாக இதை அரசு பயன்படுத்திக்கொள்ள விளைகிறது.

இந்நிலையில், அரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் தமிழ் இயக்கங்களைச் சார்ந்த தமிழ் இளைஞர்களில் சிலர் சிங்கள இராணுவத்துடன் இணைந்து கொள்ள முன்வந்துள்ளனர்.

துணைப்படையாக செயற்படும் இவ்வமைப்புகளிலிருந்து கிடைக்கப்பெறும் சிறுசிறு சலுகைகளை அனுபவிப்பதிலும்விட நிலையான அரச சம்பளமொன்றை பெற்றுக் கொள்ளலாம் எனும் நம்பிக்கையே இவர்களை அரச படையில் சேரத்தூண்டியுள்ளது. அதற்காக இவர்கள் யாழ் பிரிகேடியரிடம் சென்று தாம் வேற்றுப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் யாழ்ப்பாண கிராமசேவகர் சான்றிதழ் பெறமுடியாவிட்டால் என்ன செய்வதென்றும் கேட்டதற்கு அவை ஒரு பொருட்டல்ல என பிரிகேடியர் வாக்குறுதி அளித்துள்ளமையும் சிங்கள அரசு இது தொடர்பாக கொண்டுள்ள ஈடுபாட்டையே வெளிக்காட்டுகிறது.

தமிழீழ போராட்டத்தின் எழுச்சிக் கட்டத்தில் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டவர்களில் அதிக எண்ணிக்கையானோர் வன்னி மற்றும் கிழக்கு மாகாணங்களின் அடக்கப்பட்ட சமூகப்பிரிவுகளைச் சார்ந்த இளைஞர்களாகும். போராட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தவர்களும் பெருமளவில் இராணுவத்தால் வேட்டையாடப்பட்டவர்களும் இவர்களே. இயக்கங்களின் அக முரண்பாடுகள் காரணமாக பெருமளவில் சகோதரப் படுகொலைக்குள்ளானவர்களும் இயக்க மோதல்களால் படுகொலைக்கும் பழிவாங்கல்களுக்கும் உள்ளானவர்களும் இவர்களே. போராடும் உரிமையும் மறுக்கப்பட்டு மறுபுறம் சொந்த ஊர்களுக்கும் போக முடியாத நிலையில் இவர்கள் உயிர்வாழ்தலுக்காக தொடர்ந்தும் தாம் சார்ந்த இயக்கங்களுடன் ஒட்டிக்கொண்டிருக்க நேர்ந்தது.

எந்த அரசை எதிர்த்து இவ்விளைஞர்கள் தமது மக்களின் விடுதலைக்காகப் போராடவந்தனரோ அதே அரசுடன் இணைந்து தமது

( தொடர்ச்சி 7ம் பக்கம்)

## கொழும்பிலும் நேட்டோத் தலையீடா?

கொசோவா தேசத்தின் மீதான சேர்பிய ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதெனும் பெயரில் சேர்பியர்கள் மீது நேட்டோ ஆக்கிரமிப்பு மேற்கொண்டுள்ளது. நேட்டோவின் நவீன இராணுவத் தாக்குதலால் சேர்பியப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டும், அங்கவீனராக்கப்பட்டும் பல லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டுமுள்ளனர். "சமாதானத்தின் காவலாளியான" நேட்டோ தலையிட்டால் எதையும் நீதியாக நிறைவேற்றும் எனப் பகல் கனவு காணும் சிறிலங்காவின் சில முற்போக்காளர்கள் சிறிலங்காவிலும் நேட்டோ தலையிட்டு கொசோவோ பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் போல் தமிழர் பிரச்சனைக்கும் தீர்வைக் கொண்டுவர வேண்டுமென மனப்பால் குடிக்கத் தொடங்கியுள்ளனர்.

நமது மக்களின் கண்ணீராலும் இரத்தத்தாலுமான 20 வருடத்திற்கும் மேற்பட்ட போராட்ட வரலாற்றைப் படைத்திருக்கும் ஈழத்தமிழரான நாம் எந்த நிலையிலும் நமது விடுதலைக்கு அந்நிய சக்திகளின் உதவியை நாடும் மனநிலைக்கு ஆட்படாதிருப்போம். உலகையே தமது பிடிக்குள் வைத்திருக்கவும், தமக்கு தேவைப்படும் போது எந்தத் தேசத்தையும் ஆக்கிரமிக்கவும் அழித்தொழிக்கவும் தயங்காத ஏகாதிபத்திய முகாமும் அதன் நேட்டோ கூட்டும் எமக்கு விடுதலை வாங்கித்தரத் தேவையில்லை. அத்தகையதொரு விடுதலையைப் பெற்றுக் கொண்டு காலத்திற்கும் ஏகாதிபத்திய நவகாலனித்துவப் பிடிக்குள் அகப்பட்டு அவர்களைச் சார்ந்திருக்கும் அடிமைப்பட்ட தேசத்தின் நிலைக்கு நாம் ஆளாகவும் தேவையில்லை. யுகோஸ்லேவியாவில் நடப்பது போல் சிறிலங்காவில் சிங்கள மக்களின் மீது குண்டு பொழியச் செய்து விடுதலையைப் பெற்றுக்கொள்ளுமளவுக்கு நாம் மானுட விழுமியங்களைப் புறக்கணித்துவிட்ட தேசத்தினருமல்ல என்பதையும் உலகுக்கு உரத்துக் கூறுகிறோம்.

அகிம்சைப் போராட்ட வழிமுறைகளினூடே ஆயுதப் போராட்டமாக பரிணமித்திருக்கும் நீண்ட அரசியல் போராட்டப் பாரம்பரியத்தையுடைய ஈழத்தமிழ் மக்களான நாம் எமது விடுதலைக்கான போராட்டத்தை நாமே மேற்கொள்வோம். நாமே போராடி வெற்றி பெறுவோம். விடுதலையடைவோம்!!!

## இந்திய மத்திய அரசு கவிழ்ந்ததா !

இந்தியாவில் மத்திய அரசு கவிழ்ந்து விட்டது. மீண்டும் வரப்போவது யார்? ஈழத் தமிழர் விடுதலை போராட்டத்தை இது எவ்வாறு பாதிக்கும்? கொங்கிரஸ் வருமா? இந்திய - இலங்கை ஒப்பந்தம் மீண்டும் நடைமுறைக்கு வருமா? பி.ஜே. பி வந்தால் பரவாயில்லை . இப்படி பல கேள்விகளும் கருத்தாடல்களும் நமது மக்கள் மத்தியில் வழமைபோல...

முதலாவதாக, இந்தியாவில் மத்திய அரசு கவிழவில்லை. மாறாக அடிக்கடி கவிழ்வதும் மீண்டும் வருவதும் அரசாங்கங்களும் கூட்டணி அரசாங்கங்களுமே. பி.ஜே.பி கவிழும் என்பது அது அமைக்கப்படும் போதே தெரிந்த விடயம். நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன அவ்வளவே. மத்திய அரசு... அது அப்படியே ஆடாது அசையாது நிலைகொண்டிருக்கிறது. மக்களையும், அரசியல் கட்சிகளையும், வந்து போகும் அரசாங்கங்களையும் ஆட்டுவிக்கிறது. அரசு வேறு அரசாங்கம் வேறு. சிறிலங்கா அரசுக்கும் அங்கு வந்து போகும் அரசாங்களுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுதான் நமக்கு நன்கு தெரியுமே. இந்தியாவிலும் எந்த அரசாங்கம் வந்தாலும் மத்திய அரசின் கொள்கை... பிராந்திய வல்லாதிக்கம், தனக்குள் அமையும் தேசங்களை அடக்குதல், எதிர்ப்பு போராட்டங்களை கொடூரமாக அடக்குவது, ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவது... இவற்றில் இன்னொரு சிந்தனைக்கு இடம் வேண்டாம்.

இரண்டாவது, எந்த அரசாங்கள் ஆட்சி அமைத்தாலும் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் குறித்த இந்திய அரசின் கொள்கை ஒன்றுதான். சிங்கள அரசின் அடக்குமுறைகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணைபோகும். போர்க்கருவிகளை வழங்கும், பயிற்சிகள் வழங்கும். பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மாட்டோம் என தற்போதைக்கு கூறிக்கொண்டாலும் நிலைமை சிறிலங்கா அரசின் கைமீறி போகும் போது நேரடியாக தலையிடவும் செய்யும். ஈழவிடுதலையை கருவறுக்க தன்னால் இயன்ற எதனையும் செய்யும். பிராந்திய நலன், தனது தேசிய நலன் இப்படி ஏதாவது காரணம் கூறிக்கொள்ளும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நியாயப்படுத்தல்கள் போல.

மூன்றாவதாக, இந்திய அரசு ஒருபுறம் பலமாக இருந்தாலும். மறுபுறம் சிதைவுறும் உள்ளது. உள்ளார்ந்து கிடக்கும் முரண்பாடு இதுதான். சிதைவுகளை அது ஒட்டுப்போட்டு வருகிறது. தேவையானபோது அதிகாரத்தை கொண்டு எதிர்ப்புகளை நசுக்கி வருகின்றது. எவ்வாறாயினும் இந்திய மையஅரசு என்பது சிதைவுற விதிக்கப்பட்ட கடைசி சாம்ராஜ்யம் தான். அதன் தலைவிதி ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது.

ஆக இந்திய அரசு கவிழவில்லை. அது கவிழாது மாறாக தகர்ந்து போகும். அங்குள்ள தேசங்களை அடக்கும் தீவிரம் இந்த தகர்வை விரைவுபடுத்தும்.

**உள்ளே...**

✍ தமிழீழ மக்கள் குடியரசு !
✍ பெண் விடுதலையும் சமூக மாற்றமும் !
✍ போரில் சிறுவர்கள் !

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

# தமிழீழ மக்கள் குடியரசு

ஈழத்தமிழராகிய நாம், பின்வரும் இரண்டு பிரதான முரண்பாடுகளின் தாக்கத்திற்குள்ளாகியிருக்கின்றோம். (1) எமக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையிலான முரண்பாடுகள். (2) எமக்குள்ளே நிலவுகின்ற அக முரண்பாடுகள். இவ்விரண்டு முரண்பாடுகளும் எமது சமூக வளர்ச்சியின் மீது கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. சுருங்கக் கூறின், இம் முரண்பாடுகளே தமிழ் தேசத்தின் இன்றைய இயக்கத்திற்கான மூலவிசைகளாக அமைந்திருக்கின்றன.

எமக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான முரண்பாடுகள் புறநிலையானவை, சிறீலங்கா அரசு எம்மை ஆக்கிரமித்திருப்பதால் உருவானவை, தேச ஒடுக்குமுறை என்பதே, இம் முரண்பாடுகளுக்கான அடித்தளமாக அமைந்திருக்கின்றது. ஒரு தனியான தேசம் என்ற வகையில் எமக்குள்ள உரிமைகளை மறுத்து, எம்மை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்கு சிறீலங்கா அரசு கடந்த அரை நூற்றாண்டுகளாக எம்மீது பலவிதமான அடக்குமுறைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றது, இத்தகைய அடக்குமுறையின் உச்ச வடிவமாக, கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக, எம்மீது கொடிய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது, எமது தேச இருப்பை வேரோடு அழிப்பதற்கு தனது வளங்கள் அனைத்தையும் செலவிட்டு, மூர்க்கமாக செயற்பட்டு வருகின்றது. இத்தகைய கொடூர அனுபவங்களின் பின்னணியில், எமக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படுவது என்பது, நாம் ஒரு தனியான, சுதந்திரமான தேசஅரசை உருவாக்குவதால் மட்டுமே சாத்தியமாகும் என்ற தவிர்க்க முடியாத முடிவு பெறப்பட்டிருக்கிறது.

எமது தேச இருப்பை அழித்தும், எமது உரிமைகளை மறுத்தும் வருகின்ற சிறீலங்கா அரசுடன் எவ்வித சமரத்திற்கும் இடமில்லை என்பதை, அரை நூற்றாண்டுகால அனுபவங்கள் எமக்கு மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளன. இந்த அரைநூற்றாண்டு காலத்தில், சிறீலங்கா அரசின் திட்டமிட்ட அடக்குமுறைகளினால் எமது இயல்பான, சுயமான சமூக வளர்ச்சி தடுக்கப்பட்டு விட்டது: எமது நிலங்கள் பறிக்கப்பட்டு விட்டன, எமது கடல் வளம் அபகரிக்கப்பட்டு விட்டது, எமது பொருளாதாரம் சிதைக்கப்பட்டு விட்டது, எம்மிடையேயான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. எமது பிரதேசங்களின் உள்ளகக்கட்டமைப்புக்கள் சீர்குலைக்கப்பட்டுவிட்டன, எமது தாயகத்திலேயே நாம் கூறுபிரிக்கப்பட்டு சிறுபான்மைகளாக்கப்பட்டு வருகின்றோம், சிறீலங்கா அரசு எம்மீது திணித்துள்ள பொருளாதாரத் தடைகளும், கொடிய யுத்தமும் எம்மை உடல், உளரீதியாக பாரிய அளவில் தாக்கி வருகின்றன, எம்மை உடல் உளரீதியில் ஊனமுற்ற சமூகமாக உருமாற்றி வருகின்றன.

எந்தவொரு சமூகமும், இன்னொரு அரசின் ஆதிக்கத்தின் கீழ், தான் சுதந்திரத்தை இழந்து, தொடர்ச்சியாக அடங்கி வாழ்ந்த வரலாறு எதுவும் கிடையாது. ஆக்கிரமிக்கப்பட்ட ஒவ்வொரு சமூகமும், ஏதோ ஒரு கட்டத்தில் தன்மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, போராடி, தன்னை விடுவித்துக் கொண்டதே இன்றுவரையிலான வரலாறாக இருக்கின்றது. இந்த உண்மை ஈழத்தமிழராகிய எமக்கும் முற்றிலும் பொருந்தும். சிறீலங்கா அரசின் பேரினவாத அடக்குமுறைகளுக்கும், ஆக்கிரமிப்புக்கும் எதிராக நாம் ஏற்கனவே வீறார்ந்த முறையில் போராடிக் கொண்டிருக்கிறோம். இப்போது, கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக, சிறீலங்கா அரசு எம்மீது கொடிய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள நிலையில், எமக்கென, சொந்த சுதந்திர அரசை உருவாக்குவது என்பது, ஒரு அவசியமான அவசரமான விடயமாக எமது அரசியல் நிகழ்ச்சி நிரலில் முதன்மை பெற்று விட்டது.

எமக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே தீவிரமடைந்து விட்ட முரண்பாடுகளை, நாள்தோறும் இரத்தமும், சதையும் சிந்தும் அழிவு நிலையின் உச்சகட்டத்தை அடைந்திருக்கின்ற இப்பகை முரண்பாடுகளை நாம் உடனடியாக தீர்த்துக் கொள்ள வேண்டும். இம்முரண்பாடுகளை உரிய முறையில் தீர்ப்பதே - அதாவது எமக்கென சுதந்திர அரசை அமைப்பதே - நாம் சுயமானதும், இயல்பானதுமான வளர்ச்சிகளை சகல தளங்களிலும் அடைவதற்கான முன்நிபந்தனையாக இருக்கிறது.

எம்மத்தியில் நிலவுகின்ற அகமுரண்பாடுகள் என்பவை, பிரதானமாக ஆணாதிக்கம், சாதியம் மற்றும் பிரதேசவாதம் என்பவற்றின் அடிப்படையில் நிலவுகின்றன. இம்முரண்பாடுகள் மிக நீண்டகாலமாக எம்மீது வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. இவை எமது சமூக இயக்கத்தின் மீது எதிர்மறையான பாதிப்புக்களை ஏற்படுத்தி, நாம் உயர் ஜனநாயக மரபுகளும், முற்போக்கு பண்புகளும் கொண்ட சமூகமாக முன்னேறுவதை தடுத்து வந்திருக்கின்றன. சித்தாந்த தளத்தில் இம் முரண்பாடுகள் ஒன்று திரண்டு, யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சுரண்டும்வர்க்க சமூகமாக இறுகிக் கெட்டிப் போயுள்ளன. இந்த பிற்போக்கு சித்தாந்தத்தின் துணையுடன், தமிழ் சமூகத்திலுள்ள ஆதிக்கப் பிரிவினர் தமது கரங்களில் எல்லையற்ற அதிகாரங்களைக் குவித்துள்ளனர். இவ்வாறு தமிழ் சமூகத்திற்குள் பிற்போக்கான சித்தாந்தமும், அதிகாரப்பிரிவினரும் மிக நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வந்திருப்பதன் காரணமாக, எம்மத்தியில் வர்க்க, ஆணாதிக்க, சாதிய, மற்றும் பிரதேசரீதியாக அதிகாரப் படிநிலை உறவுகள் உருவாவதும், அவை சமூக அவசியமாக ஏற்றுக் கொள்வதும் மிக எளிதாக சாத்தியமாகியுள்ளன. இவற்றின் விளைவாக தமிழ் தேசத்தின் மிகப் பெரும்பாலானோர் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார ரீதியாக ஒதுக்கி வைக்கப்படுவதும், அடக்கப்படுவதும், அவர்களின் ஜனநாய உரிமைகள் பறிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும் பொது வழக்காகி உள்ளன. சமூக உற்பத்தியிலும், வளர்ச்சியிலும் மிகப் பிரதான பாத்திரத்தை வகிக்கின்ற இம் மக்கள், அவற்றை அனுபவிப்பதிலிருந்து கடுமையான முறையில் விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களின் மிகப் பெரும்பாலானோர் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும், அடக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்ற கொடிய அவமானகரமான நிலைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். மக்கள் அனைவரும் தமது உரிமைகள் குறித்த அக்கறையும், பிரக்ஞையும் கொண்ட சுதந்திர பிரஜைகளாகவும் தமது வாழ்வை தாமே தீர்மானிக்கக் கூடியவர்களாகவும் விளங்கக் கூடிய ஒரு சமூகச் சூழல் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய சூழல் தோன்றும் போதுதான், ஒரு தேசம் என்ற வகையில், தமிழ் மக்கள் தம்மத்தியில் நிலவுகின்ற முரண்பாடுகளை பகிரங்க அரங்கிற்கு கொண்டு வருவதும், தமக்குரிய திசைவழியை தீர்மானிப்பதும் சாத்தியமாகும்.

இவ்வாறு தமிழ் தேசத்தின் விடுதலை என்பது, சிறீலங்கா அசுடனான முரண்பாடுகளையும், தமிழ் தேசத்திற்குள் நிலவுகின்ற அகமுரண்பாடுகளையும் முறையாக தீர்ப்பதுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இவ்விருவகை முரண்பாடுகளையும் முறையாகத் தீர்க்கத் தவறினாலோ, அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றை முக்கியத்துவமற்றமதாகக் கருதி உதாசீனப்படுத்தினாலோ, தமிழ் [illegible] தனது உண்மையான விடுதலை[illegible] பெறமுடியாது.

தமிழ் தேசத்தின் அரசியல் இலக்காகவும், அதன் மாபெரும் அர்ப்பணிப்புகளினாலும், தியாகங்களினாலும் பேணி வளர்க்கப்படுகின்ற அரசியல் கருவாகவும் விளங்குகின்ற தமிழ் தேச அரசு என்பது உண்மையான மக்கள் அரசாக உருப்பெற வேண்டும். சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுவதாகவும், தனக்குள் நிலவுகின்ற அக முரண்பாடுகளுக்கான தீர்வாகவும் அமையக் கூடிய இத்தகைய அரசு என்பது, தமிழ் தேசத்தின் ஆன்மாவாகத் திகழக் கூடிய ஒரு மக்கள் குடியரசாக - "தமிழீழ மக்கள் குடியரசாக" - அமைவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய உறுதிப்பாடு என்பது, தமிழ் தேசம் தனது சொந்த அரசை உருவாக்கியதன் பின்பு அல்ல, மாறாக அதை உருவாக்குவதற்கான இன்றைய போராட்டத்தினூடாகவே நிலைநிறுத்தப்பட

**தமிழ் தேசத்திற்குள் நிலவுகின்ற அகமுரண்பாடுகளை வெளிப்படுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்காக போராடுவதன் மூலம், தமிழீழ விடுதலைப் போராட்டம் கைவிடப்படுவதாகவோ அல்லது பலவீனப்படுவதாகவோ ஒரு போதும் அமைய மாட்டாது. இதற்கு மாறாக, பரம்பரை பரம்பரையாக, காலம் பூராவும் அடக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் உடல், உளரீதியாக சிதைக்கப்பட்டும் விட்ட மக்கள், புதிய எழுச்சியுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்வதை இது தீவிரப்படுத்தும்.**

வேண்டும்.

சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் தேசம் தன்னை விடுவிப்பதே முதன்மையானது என்றும், இத்தகைய விடுதலைக்காக கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிற இன்றைய நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்ற அக முரண்பாடுகளை முதன்மைப்படுத்துவதால் போராட்டம் பலவீனப்படும் என்ற கருத்தும் நீண்ட காலமாக தமிழ் தேச அரசியலில் நிலவி வருகின்றது. சகல தமிழ் அரசியல் அமைப்புக்களிலும் இக் கருத்து ஆதிக்கம் செலுத்தியிருக்கின்றது, செலுத்தி வருகின்றது. இவ்வாறான கருத்து அடிப்படையில் தவறானது மட்டுமல்ல, தமிழ் தேசத்தின் இன்றைய எதார்த்த நிலைமைக்கும் மாறானதும் கூட.

முதலாவதாக தமிழ் தேசத்திற்குள் நிலவுகின்ற அகமுரண்பாடுகளை வெளிப்படுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்காக போராடுவதன் மூலம், தமிழீழ விடுதலைப் போராட்டம் கைவிடப்படுவதாகவோ அல்லது பலவீனப்படுவதாகவோ ஒரு போதும் அமைய மாட்டாது. இதற்கு மாறாக, பரம்பரை பரம்பரையாக, காலம் பூராவும் அடக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் உடல், உளரீதியாக சிதைக்கப்பட்டும் விட்ட மக்கள், புதிய எழுச்சியுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்வதை இது தீவிரப்படுத்தும். பல நூற்றாண்டு கால அரச அடக்குமுறைகளால் வாழ்வு மறுக்கப்பட்டுள்ள மக்கள், இவ்வடக்குமுறைகள் குறித்தும் அவற்றை ஒழித்துக் கட்டுவது குறித்தும் புரிந்து கொள்ளும் போது, இவற்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்குரிய முன்நிபந்தனையாக சிறீலங்கா அரசின் ஆதிக்கத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்ற எதார்த்தத்தையும் புரிந்து கொள்ளும் போது, அவர்கள் புதிய எழுச்சியுடன், பிரக்ஞை பூர்வமாக போராட்டத்தில் பங்கு கொள்வது சாத்தியப்படும். மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி யாரும் புரட்சியில் வெற்றி பெற முடியாது. தாம் எதற்காக போராடுகிறோம், எதைப் புதிதாக உருவாக்கப் போகிறோம் என்பதில் மக்கள் எவ்வளவு தெளிவாக இருக்கின்றார்களோ, அந்தளவுக்கு அவர்கள் போராட்டத்தில் பங்கு கொள்வதும், இறுதிவரை முன்னேறிச் செல்வதும் அதிகரிக்கின்றது, சாத்தியமாகின்றது.

இரண்டாவதாக, ஒரு போராட்ட சூழலில் ஏற்படுகின்ற பல்வேறு முரண்பாடுகள் பற்றி மக்களுக்கு தெளிவான புரிதல் இல்லாத போது, அவர்கள் எதிரியின் தந்திரங்களுக்கும், சூழ்சிகளுக்கும் பலியாகக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன. எதிரியினால் அள்ளி வீசப்படுகின்ற வாக்குறுதிகள், மக்களை பிரிப்பதற்கு எதிரி மேற்கொள்கின்ற சூழ்ச்சிகள் போன்றவற்றினால் மக்கள் தவறாக திசை திருப்பக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. இவற்றிலிருந்து மக்கள் தவிர்ந்து கொள்ளக் கூடிய ஒரே வழி, அவர்கள் தமது போராட்டம் குறித்தும், தாம் எதிர் கொள்கின்ற பிரச்சனைகள் முரண்பாடுகள் குறித்தும் தெளிவான புரிதலைப் பெற்றிருப்பதே. சிறீலங்கா அரசு தமிழ் தேசத்தை கூறு பரிப்பதற்காக நீண்டகாலமாகவே, குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்ற பிரதேச முரண்பாடுகளை பயன்படுத்தி வந்திருப்பதை நாம் அறிவோம். இந்த முயற்சியில் அது கணிசமான வெற்றியையும் பெற்றிருக்கின்றது. இத்தகைய நிலை தொடர்ந்தும் நீடிக்குமாயின், நாம் ஒரே அரசியல் தலைவிதியினால் இறுகப் பிணைக்கப்பட்ட, ஒரு உறுதியான தேசமாக நிமிர்ந்து நிற்பது தடைப்படும், நாம் இன்னும் நீண்ட காலத்திற்கு, சிறீலங்கா அரசின் ஆதிக்கத்தின் கீழ் அடக்கப்படுகின்ற நிலை தொடரும்.

மூன்றாவதாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், ஏற்கனவே இந்த அடக்கப்பட்ட பிரிவினர்கள்தான் அதிக எண்ணிக்கையிலும், தீவிரமாகவும் பங்கு கொண்டிருக்கின்றார்கள் என்ற உண்மை எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, இராணுவ ரீதியில் முன்னெடுத்துச் செல்கின்ற விடுதலைப் புலிகள் அமைப்பில், கிழக்கு மற்றும் வன்னிப் பிராந்தியங்களை சேர்ந்தவர்களும், வர்க்க மற்றும் சாதிய ரீதியில் அடக்கப்பட்ட பிரிவினர்களும், பெண்களுமே அவ்வமைப்பின் முதுகெலும்பாக அமைந்திருக்கிறார்கள். இவ்வாறு ஏற்கனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயிர் நாடியாக முதன்மை சக்திகளாக இவர்கள் அமைந்து விட்ட நிலையில், இவர்கள் மீதான சமூக அடக்கு முறைகளை அழித்தொழிப்பதன் மூலம், இப் போராட்டம் ஒரு போதும் பின்னடைந்து விடமாட்டாது. மாறாக, இப்பிரிவினர் தமது முற்றான விடுதலையின் அவசியத்திற்காக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்னும் தீவிரமாக, இன்னும் பிரக்ஞைபூர்வமாக, இன்னும் முற்போக்காக பங்கு கொள்வது அதிகரிக்கும்.

எனவே சிறீலங்கா அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக தமிழ் தேசம் முன்னெடுத்திருக்கின்ற போராட்டமானது, தமிழ் தேசத்தினுள் நிலவுகின்ற அக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்துடன் பொருத்தமான முறையில் இணைக்கப்படும் போது, இவ்விரண்டு போராட்டங்களும் ஒன்றையொன்று பலப்படுத்தவும், முன்னோக்கிச் செல்லவும் வழிவகுக்கும் என்ற உண்மை புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதற்கு மாறாக, இவற்றில் ஒன்றைக் கைவிடுவதால், இரண்டையுமே பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்பதையும் மனத்திலிருத்த வேண்டும். இன்று வரை தமிழ் தேசத்தின் போராட்ட வரலாறு இதையே எமக்கு உணர்த்துகின்றது. தமிழ் தேசத்திற்குள் நிலவுகின்ற அக ஒடுக்குமுறைகளை இப்போது தீர்க்க முனைந்தால், சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டம் பலவீனப்படும் என்ற தவறான கொள்கையைப் பின்பற்றி வந்திருப்பதானது, நாம் இன்னமும் சிறீலங்கா அரசின் மீது முற்றான வெற்றியை ஈட்ட முடியாதிருப்பதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாக இருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு குறித்தும், தமிழீழ விடுதலையின் அவசியம் குறித்தும், பிரதேச ரீதியாகவும், சாதி அடிப்படையிலும், பால் ரீதியாகவும், வேறுபட்ட, முரண்பட்ட கருத்துப் போக்குகள் நிலவுகின்றன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய வேறுபாடுகள் தான், சிங்கள அரசியல் தலைவர்களினால் அள்ளி வீசப்படுகின்ற போலியான வாக்குறுதிகளையும், ஏமாற்றுத் தனமான தீர்வுத்திட்டங்களையும் தமிழ் மக்களின் கணிசமான பிரிவினர் இன்னமும் நம்பவும், தனிப்பட்ட சிங்கள அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கை கொள்ளவும் காரணமாகியுள்ளன. இந்த நிலை நீடிக்கும் வரை, சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் தேசம் தன்னை முற்றாக விடுவித்துக் கொள்வது சாத்தியப்பட மாட்டாது.

*புரட்சி என்பது ஒரு சில நபர்களின் - "மேதைகளின்" - சிந்தனையிலிருந்து பிறப்பது அல்ல, அது பல்லாயிரக் கணக்கான மக்களின் பங்குபற்றலுடனும், தியாகங்களினாலும் முன்னெடுக்கப்படுகின்ற மாபெரும் "வேள்வி".* இதில் பங்கு கொள்கின்ற, தம்மை அர்ப்பணிக்கின்ற மக்கள் தமக்கு முன்னேயுள்ள பிரச்சனைகளையும், தம்மை அழுத்தி, அடக்கி வாசிக்கின்ற அனைத்து நிகழ்வுகளையும் தெளிவாகப், புரிந்து கொள்வது அவசியம். புரட்சியின் வெற்றியின் பின்பு, ஒரு புதிய சமூகம் உருவாவதில்லை. மாறாக, தாம் முன்னெடுக்கின்ற புரட்சிப் போராட்டத்தினூடாகவே தமக்குரிய புதிய சமூகத்திற்கான அடித்தளங்களையும் இட்டுச் செல்கின்றார்கள். படிப்படியே புதிய சமூகத்தை உருவாக்குகிறார்கள். தமிழீழ விடுதலையின் பின்பு, தமிழ் தேசத்தினுள் நிலவுகின்ற அடக்குமுறைகள் அகற்றப்படும் என்று கூறுவது, தமிழ் மக்களிடையே இன்று நிலவுகின்ற ஆதிக்க சித்தாந்தத்தின் துல்லியமான வெளிப்பாடுதான். தமிழ் தேசம் தான் உருவாக்க நினைக்கின்ற புதிய சமூகத்திற்கான - ஆணாதிக்க, சாதிய, பிரதேச வேறுபாடுகளற்ற ஒரு மக்கள் குடியரசுக்கான - அடித்தளத்தை இப்போதே உறுதியாக இட வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, அடக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட மக்ளின் பிரக்ஞைபூர்வமான பங்கு பற்றதலுடனும், அவர்களின் தலைமையின் கீழும் முன்னெடுப்பதே இதைச் சாத்தியமாக்குவதற்கான முன்நிபந்தனையாக இருக்கின்றது. ஏற்கனவே, தமது அளப்பரிய அர்ப்பணிப்புகளினாலும், தியாகங்களினாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயிர்நாடியாக விளங்குகின்ற இம் மக்கள், இப் போராட்டத்தின் தலைமையாக தம்மை பிரக்ஞைபூர்வமாக உயர்த்திக்கொள்வதே இப்போது செய்ய வேண்டிய பணியாக உள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்ற பிற்போக்கு சித்தாந்தத்தின் ஆதிக்கத்திலிருந்தும், ஆதிக்கப் பிரிவினர்களிடமிருந்தும் தம்மை முற்றாக விடுவித்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இம் மக்கள் தமது தலைமையின் கீழ் முன்னெடுக்கும் போது, சமத்துவத்தையும், உயர் ஜனநாயகத்தையும் அடித்தளமாகக் கொண்ட "தமிழீழ மக்கள் குடியரசு" மலர்வது நீண்டகாலத்திற்கு தள்ளிப் போகாது.

சிறீலங்கா படைகளுக்கெதிரான எமது வீரஞ்செறிந்த தாக்குதல்களின் மூலம், நமது போராட்ட வலிமையை, ஆற்றலை தியாகத்தை உலகின் முன் பெருமையுடன் வெளிப்படுத்தியிருக்கின்றோம். இதே போன்று, முற்றிலும் புதிய, உயர் ஜனநாயக விழுமியங்களினதும், சமத்துவத்தினதும் அடிப்படையில் அமைந்த தேச அரசை உருவாக்குவதன் மூலம், உலகெங்கும் தமது விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற நூற்றுக் கணக்கான தேசங்களுக்கு நாம் மாபெரும் முன்மாதிரியாக அமைவோம்! தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகரப் பண்பை, அதன் மக்கள் சாரத்தை உலகின் முன் ஒரு சுடரொளியாய் உயர்த்திப் பிடிப்போம்!! அடக்கப்பட்ட, வாழ்வு மறுக்கப்பட்ட மக்களின் தலைமையில் "தமிழீழ மக்கள் குடியரசை" நிறுவுவோம்!!!

**சித்தாந்த தளத்தில் இம் முரண்பாடுகள் ஒன்று திரண்டு, [illegible], சைவ, வேளாள, ஆணாதிக்க [illegible] வர்க்க சமூகமாக இறுகிக் கெட்டிப் போயுள்ளன. இந்த பிற்போக்கு சித்தாந்தத்தின் துணையுடன், தமிழ் சமூகத்திலுள்ள ஆதிக்கப் பிரிவினர் தமது கரங்களில் எல்லையற்ற அதிகாரங்களைக் குவித்துள்ளனர். இவ்வாறு தமிழ் சமூகத்திற்குள் பிற்போக்கான சித்தாந்தமும், அதிகாரப்பிரிவினரும் மிக நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்திருப்பதன் காரணமாக, எம்மத்தியில் வர்க்க, ஆணாதிக்க, சாதிய, மற்றும் பிரதேசரீதியாக அதிகாரப் படிநிலை உறவுகள் உருவாவதும், அவை சமூக அவசியமாக ஏற்றுக் கொள்வதும் மிக [illegible] தேசத்தின் மிகப் பெரும்பான்மையினர் சமூக, பொருளாதார, [illegible] ரீதியாக ஒதுக்கி வைக்கப்படுவதும், அடக்கப்படுவதும், அவர்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும் பொது வழக்காகி உள்ளன.**

# பெண் விடுதலையை நோக்கி...

# பெண்விடுதலைப் போராட்டமும் சமூக மாற்றமும்

"பெண்களுக்கு ஏன் தனித்துவமான போராட்டங்கள்? தொழிற்சாலைகளிலும் விவசாயத் துறையிலும் சுரண்டலுக்குள்ளாகும் பெண்கள், ஆண்களுடன் இணைந்து சமூகப் புரட்சிக்காக - வர்க்க விடுதலைக்காகப் போராடுவதன் மூலம் விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியுமல்லவா? சோசலிச அரசாட்சியில் பெண்களுக்கு சம சம்பளம் வழங்கப்படும் - பெண்கள் சமத்துவமாக நடத்தப்படுவார்கள்..."

இது தான் பெண்விடுதலைப் போராட்டத்திலீடுபடும் பெண்களுக்கு மரபார்ந்த மார்க்சிய தரப்பினால் சொல்லப்பட்டு வரும் அறிவுரையாயுள்ளது.

சோசலிச அரசு பெண்ணுரிமையை சட்டரீதியாக உறுதிப்படுத்தும்: பெண்களுக்கு சட்ட பாதுகாப்பை ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் காலங்காலமாக மனித சிந்தனையில் புரையோடிப் போயிருக்கும் ஆணாதிக்க சித்தாந்தத்தையும் அதன் வழிபட்ட நடைமுறைகளையும் சோசலிச அரசால் முடிவுக்குக் கொண்டுவந்திட முடியுமா?

-அரசு சீதனத்தை சட்டத்தின் மூலம் தடை செய்யலாம். ஆனால் சீதனம் தராததை மனதில் வைத்துக் கொண்டு கணவன் மனைவியை வேறு பல வழிகளிலும் இம்சிப்பதை அரசால் தடுத்து நிறுத்த முடியுமா? வேண்டுமானால் பெண்ணை துன்புறுத்தியதற்காக அம் மனிதனை சட்டரீதியாக தண்டிக்கலாம். எனினும் அவனது மனதிலுள்ள உளுத்துப்போன சிந்தனையை அரச சட்டங்களால் மாற்றியமைத்திட முடியுமா?

-தெருவில் போகும் பெண்ணை வக்கிரத்தனமாகப் பார்க்கும் ஆணை அரசு எவ்வாறு தண்டிக்கப் போகிறது.....? பெண்ணிய அறநெறிகளின் அடிப்படையில் இது கண்டிக்கத்தக்க விடயமாகும். ஆனால் பெண்களைப் பாலியல் நுகர்ப்பண்டமாகவே பார்த்துப் பழகியிருக்கும் ஆணாதிக்க உளவியலை சட்டத்தினால் மாத்திரம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவந்திட முடியுமா?

-தமது மகளின் முதலாவது மாதவிடாய் வெளியேற்றம் தொடர்பாக கோலாகலமான கொண்டாட்டம் நடாத்தும் பெற்றோரை கைது செய்து சிறையிலடைக்கவா முடியும்?

-பெண்ணின் சமூக உழைப்புக்கு சம ஊதியம் வழங்கப்படாதது வெறுமனே சம்பளம் சார்ந்த பிரச்சனை மாத்திரமா? இதற்குப் பின்னால் நிலவும் ஆணின் குடும்பத் தலைமைத்துவம், போஷகர் பாத்திரம் அதனுடன் தொடர்புடைய ஆணின் சமூக அதிகாரம் ஆகியவற்றைப் புறக்கணித்திட முடியுமா?

-கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உணவை வழங்கிவிட்டு பட்டினி கிடக்கும் "தாய்மையின் தியாகம்", அப்படிப்பட்டவளே "நல்ல தாய், நல்ல மனைவி, நல்ல பெண்" என அழுத்தும் சமூக சித்தாந்தம்.....?

-வீதியால் செல்லும் பெண்ணை கடத்திச் சென்று வண்புணர்ச்சிக்குள்ளாக்கி, கொலை செய்து உடலை வீசியெறிந்துவிட்டு செல்லும் ஆண்களைக் கண்டு பிடித்து தண்டிக்கலாம். ஆனால் அவ்வாறு நடந்து கொள்ளும் ஆண்களின் பாசிச சிந்தனையை எவ்வாறு இல்லாதொழிப்பது? வன்புணர்ச்சி தொடர்பாக பெண்கள் மத்தியில் நிலவும் அச்ச உணர்வை எவ்வாறு மாற்றுவது?

இது போன்ற நிறுவனமயப்பட்ட பெண் மீதான அடக்குமறை வடிவங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த அடக்குமுறைகள் யாவும் வெறுமனே பொருளாதாரத் தளத்தில் தான் நடைபெறுகிறதா?

அதைக்கடந்து, குடும்பம் எனும் சிறிய நிறுவனம் முதல் உயர் அதிகாரமுடைய அரசு இயந்திரம் மூலமாக பௌதீக ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் பெண்கள் அடக்கப்படுவது ஏன் கண்டு கொள்ளப்படுவதில்லை? அல்லது இந்த அனைத்துத் தளங்களிலும் நடைபெறும் அனைத்து வடிவிலுமான பெண்ணடக்குமுறைகளுக்கும் பொருளாதார மாற்றம் தீர்வைக் கொண்டுவந்து விடுமென்று கண்களை மூடிக்கொண்டு வெறுமனே நம்பிக்கைகளுடன் மாத்திரம் இருப்பது பால்நிலைக் குருட்டுத்தனம் (gender blindness) ஆகாதா?

இக் கேள்விகளுக்கான விடையைத் தேடுவதானால் ஆணாதிக்கம் என்றால் என்ன எனும் கேள்விக்கு முதலில் விடை கண்டாக வேண்டும்.

பெண்கள் மீதான அடக்குமுறையானது மனிதகுல வரலாற்றில் வர்க்க அமைப்புமுறை தோன்றுவதற்கு முன்னரே தோன்றிவிட்டதாகும். பெண்ணடக்குமுறையானது வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட்டாலும் இது நேரடியாக ஆண்களின் நலனுடன் தொடர்புபட்டதாயுள்ளது. பெண்களை அடக்குவதன் பின்னால் ஒவ்வொரு ஆணினதும் தனிப்பட்ட நலன்கள் காணக்கிடக்கின்றன. ஆணாதிக்க சமூக அமைப்பில் ஆண்கள் தம்க்கிடையே வர்க்கம்,சாதியம், பிரதேசம் எனப்பின [illegible] ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருப்பினும், தமக்கிடையே ஒரு அதிகாரப்படிநிலை உறவை ஏற்படுத்திக் கொண்டிருப்பதனூடாக இவ்வடக்குமுறையில் ஆண்கள் அனைவருமே பங்காளிகளாகின்றனர்.

பெண்ணடக்குமுறையின் சாராம்சமாக பெண்களின் மீதான ஆண்களின் அதிகாரப் பிரயோகம் அமைந்துள்ளது. பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான இந்த அதிகார வகைப்பட்ட உறவே ஆணாதிக்கமாகும்.

பெண்களின் மீது தொடர்ச்சியான அதிகாரத்தை (இழிவுபடுத்தல், அச்சுறுத்தல், வன்முறை, மரபுச்சட்டங்கள், அரச சட்டங்கள், சித்தாந்தம்) பிரயோகிப்பதன் மூலம் ஆணாதிக்கம் சமூகத்தில் நிலைத்திடவும் தன்னை மேலும் நிறுவனமயப்படுத்திக் கொள்ளவும் முடிந்துள்ளது.

பெண்களை அடக்கி அவர்களின் சமூக ஆளுமையைக் கட்டுப்படுத்துவதனூடாக ஆண்கள் சமூக அதிகாரத்தைத் தமது கைகளில் வைத்திருக்கின்றனர். இதனூடாக சமூகத்தின் அனைத்து நிறுவனங்களையும், துறைகளையும் (பொருளாதாரம், அரசியல், அரச இயந்திரம், கலாச்சாரம், தொடர்புசாதனம், மத நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள்) தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆண்களால் முடிந்துள்ளது. இவ்வகையில் ஆணாதிக்கமானது சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் வேர்பரப்பி சர்வவியாபகமாகியுள்ளது.

ஆணாதிக்கத்தின் இந்த சர்வவியாபகத் தன்மையானது ஆணாதிக்கம் "இயற்கையானது" எனும் சமூகக் கற்பிதத்தை மேலும் மேலும் வலுப்படுத்துவதாயுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான இந்த வெவ்வேறுபட்ட வாழ்க்கைமுறை: வெவ்வேறுபட்ட சமூக நிலைகள்: வெவ்வேறுபட்ட சிந்தனைமுறைகள் யாவும் சமூகத்தால் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டதாகும். இதுவே *பால்நிலை வேறுபாடு* என பெண்ணியவாதிகளால் இனங்காணப்பட்டுள்ளது. பால்நிலை சமூக அமைப்பில் பெண்களும் ஆண்களும் சமூகத்தால் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் ஸ்தானம் சரியானது, நியாயமானது என ஏற்றுக்கொண்டு அதற்கமைய வாழப்பழகியுள்ளனர். தாம் பெண்களை அடக்குவது சரியானதென ஆண்களும், ஆண்கள் தம்மை ஆட்சிசெய்வது ஆண்மைக்கேயுரித்தானது என்று பெண்களும் நம்புகின்றனர். இந்த அசமத்துவமான வாழ்க்கைமுறை: சமூகத்தின் ஒரு பாதியினர் அதன் மறுபாதியினரால் பாலின வேறுபாட்டின் காரணமாகவே அடக்கப்படும் சமூகநீதி பிழையானது: ஜனநாயகத்திற்கு மாறானது: அடக்குமுறை சார்ந்தது எனும் பிரக்ஞையைப் பெறுதலே *பால்நிலை விழிப்புணர்வு* ஆகும். பால்நிலை விழிப்புணர்வினூடாக பெண்கள் தம்மை அடக்கும் ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பின் ஆதிக்க வடிவங்களை இனங்கண்டு அதற்கெதிரான தமது விடுதலைப் போராட்டத்தை -பௌதீக ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும்- திட்டமிட்டமுறையில் முன்னெடுத்திட முடியும். பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையில் சமத்துவமான, ஜனநாயகமான சமூக உறவை ஏற்படுத்துவதே பெண்விடுதலையாகும்.

இதன் மறுபுறம், வர்க்க விடுதலையால் மாத்திரம் பெண்விடுதலையை ஏற்படுத்திவிட முடியாது என நாம் கூறுவதற்கான காரணத்தையும் பார்த்துச் செல்வோம்.

வர்க்க அடக்குமுறை என்பது பொருளாதார தளத்தில் நடைபெறுவதாகும். இதன் சாராம்சமாக உழைப்புச்சக்தி சுரண்டப்படுவது - உபரி உழைப்பு அபகரிப்பு - உள்ளது. இங்கு மனிதர்களுக்கிடையிலான உறவு சமூக உற்பத்தியில் அவர்கள் வகிக்கும் நிலையைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. மூலதனத்தின் பிடியிலிருந்து உழைக்கும் வர்க்கமும் ஒட்டுமொத்த மனித குலமும் விடுதலையடைவதன் மூலம் உழைப்புச் சக்தி சுரண்டப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர முடியும். ஆனால் வர்க்க விடுதலையானது - உழைப்புச் சக்தி சுரண்டல் முடிவுக்குக் கொண்டுவரப்படுவது - பெண்களின் மீதான ஆண்களின் அதிகார உறவை: ஆணாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிடுமென வாதிப்பதன் பின்னால் ஏற்புடைய சமூகக் காரணங்கள் எதுவுமில்லை. ஆணாதிக்கமும் பொருளாதாரமும் இருவேறு தளங்களில் நடைபெறும் இரு வேறு கட்டமைப்புகளாகும்: பண்பளவில் வேறுபட்டவையாகும். இது இவ்வாறிருக்க வர்க்க விடுதலையால் பெண்விடுதலை ஏற்படுமென வாதிடுவது சமூக முழுமைக்கும் பொருளாதாரக் காரணங்களை பிரதியீடு செய்ய முயலும் பொருளாதாரக் குறுக்கல்வாதமாகும்.

இது சாதியம், தேசியம், ஆணாதிக்கம், மதவாதம்.... அனைத்திற்கும் பொருந்தக் கூடியதே.

### சிக்கலான சமூகக் கட்டமைப்புகளுடன் தொடர்புபட்ட பெண்விடுதலை:

நாம் மேலே விவாதத்திற்கெடுத்துக் கொண்ட ஆணாதிக்கம் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரு கட்டமைப்புகள் உட்பட சமூகமெனும் பேரமைப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் கட்டமைப்புகள் அனைத்தும் முற்றிலும் சுயாதீனமானவையல்ல. இவை தனித்துவமானதாயிருக்கும் அதே நேரம் ஒன்றிற்கொன்று சிக்கலான இடையீட்டு உறவைக் கொண்டிருப்பதுடன் தேவைக்கேற்ப ஒன்றையொன்று பலப்படுத்தவும், பலவீனப்படுத்தவும் செய்கின்றன. இவை அனைத்தும் சார்பளவில் சுயாதீனமானவையாகும். அவ்வகையில் ஆணாதிக்கக் கட்டமைப்பு சார்பளவில் சுயாதீனமானதே. சமூகத்தின் ஏனைய கட்டமைப்புகளுடன் சிக்கலான இடைத்தொடர்பைக் கொண்டிருக்கும் ஆணாதிக்கக் கட்டமைப்பானது (தேவைக்கேற்ப) ஏனைய கட்டமைப்புகளால் பலப்படவும் பலவீனப்படவும் செய்கிறது. அதேபோல் அது தனது பங்கிற்கு ஏனைய கட்டமைப்புகளை பலப்படுத்தவும், பலவீனப்படுத்தவும் செய்கிறது. நமது சமூகத்தில் [illegible] கட்டமைப்புகளுக்கும் ஆணாதிக்கக் கட்டமைப்பிற்குமிடையிலான உறவை இக்கட்டுரை அனுமதிக்கும் எல்லைக்குள் பார்த்துச் செல்வோம்.

### சாதியம்:

அடக்கப்பட்ட சாதியப்பிரிவுகளைச் சார்ந்த பெண்கள் தாம் குறிப்பிட்ட சாதிகளைச் சார்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக தமது சாதி ஆண்களைப் போன்றே அவமானப்படுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாகின்றனர். எனினும் குறிப்பிட்ட சாதியைச் சார்ந்த பெண்கள் எனும் காரணத்தினால் இவர்கள் மீதான அடக்குமுறை இரட்டிப்பானதாயுள்ளது. தமிழ்ச் சமூகத்தில் சாதிய அடக்குமுறை வெளிப்படையாக மேலாதிக்கம் செய்த காலகட்டங்களில் அடக்கப்பட்ட சாதியப்பிரிவுகளைச் சார்ந்த பெண்கள் நாகரீகமுற்ற மனித சமூகத்தால் சகித்துக்கொள்ள முடியாத அடக்குமுறைகளுக்கு உள்ளாகினர். அடக்-

கப்பட்ட சாதியப்பிரிவுப் பெண்கள் மேற்சட்டை அணிய தடைவிதிக்கப்பட்டிருந்தது. பெண்கள் மேற்சட்டை அணிந்த போது சாதிவெறி ஆண்கள் கொக்கத் தடியால் அவற்றைக் கிழித்து பெண்களை அவமானப்படுத்தினர். சாதிக்கலவரங்களின் போது அடக்கப்பட்ட சாதியப் பெண்கள் வன்புணர்ச்சிக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்னர். ஆதிக்க சாதியினருக்கு சேவகம் செய்யும்: அவர்களின் கட்டுப்பாட்டில் வாழும் அடக்கப்பட்ட சாதியப்பிரிவுப் பெண்கள் சாதித்திமிர் ஆண்களால் பாலியல் சுரண்டலுக்குள்ளாக்கப்பட்டனர். இவ்வாறு ஆணாதிக்கமானது சாதியமைப்புடன் இணைந்து பெண்களை மேலும் அடக்குமுறைக்குள்ளாக்கியுள்ளது. அதேநேரம் சாதியம் ஆணாதிக்கத்தினால் மேலும் பலமடைந்துள்ளது. இது இன்றுவரை வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

**மதம்:**

தமிழ்ச்சமூகத்திலும் சரி உலகளாவிய அளவிலும் சரி பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப்படும் மதங்களான கத்தோலிக்கம், இஸ்லாம், இந்துமதம் யாவும் பெண்களை அடக்குவதை தமது மதக் கொள்கைகளில் ஒரு அங்கமாகவேக் கொண்டுள்ளன. ஆண்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் மத நிறுவனங்கள் காலத்திற்குக் காலம் ஆண்களால் மதம் தொடர்பாக உருவாக்கப்படும் மதக் கொள்கைகளையும் விதிமுறைகளையும் சமூகத்திற்கு வெளிப்படுத்துகின்றன. பெண்கள் தொடர்பாக ஆண்களின் சிந்தனையில் உருவாகும் சட்ட திட்டங்களை மத அனுஷ்டானங்கள், மதக் கடமைகள் எனும் பெயரில் இவ் ஆணாதிக்க விதிமுறைகள் மத நிறுவனங்களால் பெண்கள் மீது திணிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு சில: "தூய்மை" பற்றிய வருணாசிரம வழிப்பட்ட இந்துமதக் கோட்பாடுகள் பெண்களை அசுத்தமானவர்களாகவும் ஆண்களிலும் கீழானவர்களாகவும் கூறுகிறது. கத்தோலிக்கமானது, இறைவனின் கட்டளைக்கு கீழ்ப்படியாத ஏவாளின் வழிப்பட்ட பெண்களை சபிக்கப்பட்டவர்களாகவும், ஆண்களுக்கு பணிந்து வாழ வேண்டியவர்களாகவும் கூறுகிறது. இவ்வாறு ஆணாதிக்கம் மதத்தை தனது அடக்குமுறை ,நோக்கங்களுக்கு பயன்படுத்திக்கொள்கிறது.

**தேசியம்:**

இதற்கு இதற்கு சிறிலங்காவின் பிற்போக்கு சிங்களத் தேசிய உணர்வுகளை உதாரணத்திற் கெடுத்துக்கொள்ளலாம். தமிழீழத்தின் மீதான தனது ஆக்கிரமிப்பை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்காக சிங்கள அரசு இனவெறி உணர்வை சிங்கள மக்களிடம் தூண்டிவருகின்றது. வீர சிங்களவன், துட்டகைமுனு வழிவந்த வீரபுருஷன், மண்ணின் மைந்தன் போன்ற கருத்தாக்கங்களை சிங்கள அரசு சிங்கள இளம் ஆண்கள் மத்தியில் பரப்புகிறது. இதன் நோக்கம் படைக்கு ஆள் சேர்ப்பதென்றாலும் இந்த பிற்போக்கு தேசிய வெறி ஆணாதிக்க சிந்தனைகளுடன் இணைந்து வெளிப்படுவதையே இவை எமக்கு உணர்த்துகின்றன. சிங்கள இனவெறி சிந்தனைகளாலும் , ஆணாதிக்க வீரபுருஷ கருத்தாக்கங்களாலும் சித்தாந்தமயப்படுத்தப்பட்ட சிங்களப்படையினர் தமிழ்ப் பெண்களை தயக்கமின்றி வன்புணர்ச்சிக்குள்ளாக்கி கொலைசெய்வதிலும் பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாக்குவதிலும் ஈடுபடுகின்றனர். எதிரி தேசப் பெண்களை வன்புணர்ச்சிக்குட்படுத்துவதும் அதன் மூலம் அவர்களின் "இனத்தூய்மையை" அழிக்க முயல்வதும் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளிலொன்றாக தேசிய ஆக்கிரமிப்பில் கடைபிடிக்கப்படுகிறது. இதற்கு பொஸ்னிய தேசத்தின் மீதான சேர்பியப் படைகளின் தேசிய ஆக்கிரமிப்பு வெறி ஆணாதிக்கப் பாசிசமாக வெளிப்பட்டதை சமீபத்திய உதாரணமாகக் காணமுடியும். பிற்போக்கு தேசியவாதத்துடன் ஆணாதிக்கம் இணைந்து பெண்களை மேலும் அடக்குமுறைக்குள்ளாக்குவதன் மறுபுறம் விடுதலைக்கான தேசியமும் தமது பங்கிற்கு தமது தேசப் பெண்கள் மீது சுமைகளை ஏற்றாமலில்லை. தேசிய கலாச்சாரம், தேசிய மாண்பு - கௌரவம், தேசத்தின் நீடித்த இருப்பு போன்றவற்றை இவை பெண்களிடமிருந்தே எதிர்பார்க்கின்றன. இவ்வகையில் தேசியவாதம் எவ்வகையில் வெளிப்பட்டாலும் வெவ்வேறு வடிவங்களில் அது பெண்களை அடக்குகிறது. அதே நேரம் இக்கட்டமைப்புகள் தமது தேவைக்கேற்ப இன்னுமொன்றை பலவீனப்படுத்தவும் செய்யும் என்பதற்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தையே உதாரணத் திற் கெடுத்துக் கொள்ளலாம். தமிழ் சமூகத்தில் பெண்கள் போராட்டத்தில் ஈடுபடுவதானது பெண்கள் மீதான ஆணாதிக்க இறுக்கத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இங்கு தேசியம் மேலாதிக் கத் திற் கு வந்து ஆணாதிக்கத்தின் ஒரு சில பக்கங்களைப் பலவீனப் படுத்தியுள்ளது.

> **பெண்கள் எம்மைப் பொறுத்தவரையில் நாம் திக்குத் தெரியாத நிலையிலிருந்தோ சூனியத்திலிருந்தோ எமது போராட்டத்தைத் தொடங்கவில்லை. பெண்விடுதலைக்கான படிப்பினைகளை சர்வதேச அளவிலும் எமது போராட்ட சூழலினூடாகவும் நாம் நிறையவே சுவீகரித்துக் கொள்ளக் கூடியதாயுள்ளது. சர்வதேச ரீதியில் முன்னணியில் திகழும் போராட்டமாக எமது தேசவிடுதலைப் போராட்டமுள்ளது. போர்க்குணாம்சமும் ஆளுமையுமிக்க பெண்கள் இப் போராட்டத்தினூடாக உருப்பெற்றுள்ளனர்.**

**பொருளாதாரம்:**

இன்று உலகப் பொருளாதாரமானது நிலப்பிரபுத்துவ முறையிலிருந்து முதலாளித்துவமாக வளர்ச்சிபெற்று நூற்றாண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இந்நிலையில் பொருளாதாரக் கட்டமைப்பை நாம் முதலாளித்துவப் பொருளாதாரமாக எடுத்துக்கொண்டு அதற்கும் ஆணாதிக்கத்திற்குமிடையிலான உறவு என்னவெனப் பார்ப்போம். வர்க்க அடக்குமுறைகளுக்கெல்லாம் முதலே தோன்றிவிட்ட அடக்குமுறை வடிவம் எனும் வகையில் ஆணாதிக்கமானது முதலாளித்துவத்திற்கும் முந்தியதாகும். இவ்வகையில் முதலாளித்துவமின்றி ஆணாதிக்கம் நிலவ முடியாதென்றில்லை. எனினும் நவீன சமூகத்தில் இவை இரண்டும் கூட்டுச்சேர்ந்திருக்கும் விதமானது ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதது போன்றும், ஒன்றே மற்றதாக மருவியும் தோன்றுகிறது.

ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சியுடன் வளர்ச்சிபெற்ற புதிய முதலாளி வர்க்கத்திற்கு மலிவு விலையில் அதிகளவு உழைப்புச் சக்தி தேவைப்பட்டது. இதற்காக அது பெண்களதும் குழந்தைகளதும் உழைப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டது. ஒரு ஆணுக்கு வழங்கப்படும் கூலியை விடவும் குறைவான கூலி பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டது. இதற்கு வழங்கப்பட்ட விளக்கம், ஆணே குடும்பத் தலைவனாக, குடும்பத்தைப் போஷிப்பவனாக இருக்கிறான். ஆகையால் ஆணுக்கு ஒரு குடும்பத்தைப் போஷிப்பதற்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும். பெண்களும் குழந்தைகளும் குடும்பத்தில் ஆணைச் சார்ந்திருக்கிறவர்கள். எனவே அவர்களது உழைப்புக்கு கைச்செலவுக்கான பணம் (pocket money) வழங்கப்பட்டால் போதும் என்பதாகும். ஐரோப்பாவில் உருவான இந்த பாரபட்சமான கூலிமுறை இன்று சர்வவியாபகமானதாகியுள்ளது. ஆணின் சமூக அதிகார நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட முதலாளித்துவம் ஆணின் குடும்பத் தலைமை பாத்திரத்தை தனது பங்கிற்கு மேலும் வலுப்படுத்தி அதை ஒரு சமூக நியதியாக்கியுள்ளது. அதன் மறுபுறம் குடும்பமெனும் வட்டத்துள் ஆணுக்கு சேவகம் செய்துகொண்டிருந்த பெண்களை சமூக வாழ்விற்கு கொண்டுவந்ததும் முதலாளித்துவம் தான். இவ்வகையில் முதலாளித்துவம் ஆணாதிக்கத்தின் ஒரு பக்கத்தைத் தளர்த்தவும் செய்துள்ளது.

பெண்ணிய உலகக் கண்ணோட்டத்தினூடாக நாம் வாழும் சமூகத்தைப் பகுப்பாய்வு செய்தால் நமது சமூகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சமூகக் கட்டமைப்புகள் அனைத்தும் ஆணாதிக்கத்தைப் பலப்படுத்தவும், ஆணாதிக்கத்தின் மூலம் தாம் பலம் பெறவும் செய்கின்றன எனும் விளக்கத்திற்கு எம்மால் வர முடியும். இவ்விளக்கத்தின் அடிப்படையில் பெண்விடுதலைக்கான மூலோபாயத்தை நாம் திட்டமிட முடியும்.

பெண்களை அடக்க ஆணாதிக்கத்திற்கு துணைபோகும் முதலாளித்துவம், சாதியம் உட்பட பிற்போக்கான அனைத்துக் கட்டமைப்புகளும் பலவீனப்படுத்தப்படுவதும் தகர்க்கப்படுவதும் பெண்விடுதலைக்கு இன்றியமையாததாயுள்ளது. இவ்வகையில் பெண்கள் நாம் பெண்விடுதலைக்கான நமது தனித்துவமான போராட்டத்துடன் சமூகத்தின் அனைத்துப் பிற்போக்கு, ஆதிக்க, சுரண்டல் நடவடிக்கைகளுக்கெதிராகவும் போராட வேண்டியவர்களாயுள்ளோம். தமது விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் அனைத்து அடக்கப்பட்ட சமூக சக்திகளினதும் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் அப்போராட்டங்களில் பங்குபற்றவும், அவற்றைத் தீவிரப்படுத்தவும் வேண்டிய தேவை பெண்களுக்குண்டு. இதனூடாக ஒரு சமூகசக்தி எனும் வகையில் பெண்கள் தம்மை அடக்க துணைபோகும் ஏனைய சமூகக் காரணிகளை பலவீனப்படுத்தவும் தமது விடுதலையை தீவிரமாக முன்னெடுக்கவும் முடியும்.

அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் சமூகப்புரட்சியுடனும் அரச அதிகாரத்தை அடக்கப்பட்ட சமூக சக்திகள் கைப்பற்றுவதுடனும் தொடர்புபட்டுள்ளன.

சமூகத்தில் ஆதிக்கம் செய்யும் சக்திகளின் (வர்க்க, சாதிய, ஆணாதிக்க, இன, மத......) பிரதிநிதியாக, அடக்கப்பட்ட சமூக சக்திகளை கட்டுப்படுத்தும், தேவைப்படின் அவர்களை அழித்தொழித்து ஆதிக்க சக்திகளுக்கு சேவை செய்யும் ஒரு பலமிக்க இயந்திரமாக, மொத்த சமூகத்தினதும் அச்சத்திற்கு பாத்திரமானதாக அரசு இருக்கிறது. பெண்கள் எம்மைப் பொறுத்தவரையில் அரச இயந்திரமானது பெண்களை சமூகத்தில் இரண்டாம் நிலையில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக திட்டமிட்ட ரீதியில் தனது அதிகாரத்தைப் பிரயோகித்துவரும் ஆணாதிக்க அரச இயந்திரமாகும். இத்தகைய அரசின் கீழ் பெண்கள் எவ்வளவு தீவிரமாக தமது விடுதலைக்காகப் போராடினாலும் பூரண வெற்றியை அடைய முடியாது. எம்மைப் பொறுத்தவரையில் அனைத்து அடக்குமுறைகளுக்கும் பாத்திரதாரியான பிற்போக்கு அரச இயந்திரம் தகர்க்கப்பட வேண்டும். அவ்விடத்தில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்திடும் பெண்களின் பிரதிநிதித்துவத்திலான ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட வேண்டும்.

தமிழீழ தேசவிடுதலைப் போராட்டக் களமானது பல்வேறு அடக்கப்பட்ட சமூக சக்திகளையும் அரங்கிற்குக் கொண்டு வந்துள்ளது. இத்தேச விடுதலைப் போராட்டத்தினூடாக அடக்கப்பட்ட அனைத்து சமூக சக்திகளும் தத்தமது சமூகநிலை, தமது தனித்துவமான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் ஆகியன பற்றிய பிரக்ஞையைப் பெறவும், ஒன்றின் போராட்டத்தினூடாக ஏனையவை பலம் பெறவும், கற்றுக்கொள்ளவும், ஒன்றிணைந்து ஆதிக்கப்பிரிவைப் பலவீனப்படுத்தவுமான வாய்ப்புகளை தேசியப் போராட்டம் ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமின்றி, கூர்மையடைந்துவிட்ட தேசியப்பேராட்டமானது தமிழ் சமூகத்தின் இறுக்கமான அகவாழ்வில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுமுள்ளது. இத்தகையதொரு காலகட்டமானது சமூக மாற்றத்தினை - சமூகப்புரட்சியை வேண்டிநிற்கும் முரண்பட்ட சமூக சக்திகளுக்கு மிகவும் வாய்ப்பானதாயுள்ளது. தமது முழு போராட்ட ஆற்றலையும் ஒன்று திரட்டி ஆதிக்க - பிற்போக்கு சமூக அமைப்பை சிதைத்து சமத்துவமான சமூக அமைப்பை ஏற்படுத்துவதற்கு இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள அடக்கப்பட்ட சமூக சக்திகள் தவறிவிடக் கூடாது.

பெண்கள் எம்மைப் பொறுத்த வரையில், தமிழ் தேச விடுதலைப் போராட்டமானது எமது சமூக அமைப்பில் பெண்கள் தொடர்பாக நிலவி வந்த மிகவும் இறுக்கமான போக்குகளில் நெகிழ்வை ஏற்படுத்தியேயுள்ளது. இப்போராட்டம் பெருமளவில் பெண்களை சமூக அரங்கிற்குக் கொண்டுவந்துள்ளது. தேசியப்போராட்டத்தின் வளர்ச்சியானது ஒரு குறிப்பிட்ட மட்டத்திலாயினும் பெண்கள் மீதான அடக்குமுறை தொடர்பான விழிப்புணர்வை பெற்றுக்கொள்ள களமமைத்துள்ளது. பெண்விடுதலை எனும் கருத்தாக்கம் வெவ்வேறு புரிதல்கள், வெவ்வேறு வழிமுறைகளுக்கூடாகவாயினும் வெளிப்பட இப்போராட்டக் களமே காரணமாகும்.


(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# போரில் சிறுவர்கள் !

சிறுவர்கள் ஒரு தேசத்தின் உயிர் வித்துக்கள் அத்தேச்ததின் கலாச்சாரம் பண்பாடு அறிவு... என்பவற்றை தாங்கிநிற்கும் விழுதுகள்.அதன் வலிமையாகவும் மகிழ்ச்சியாகவும் எதிர்காலமாகவும் அமைபவர்கள். சுருங்கச் சொன்னால் சிறுவர்கள் ஒரு தேசத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியாக விளங்குகிறாகள். எனவே ஒவ்வொரு தேசமும் தனது சிறுவர்களை பேணிக்காக்க வேண்டிய அவசிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது

சமீப காலங்களில் சாவதேச அரங்கில் போரில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுவது முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. பல்வேறு மனித உரிமை அமைப்புகள் மட்டுமன்றி ஐ.நா.சபையும் கூட சிறுவர்கள் போரில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்காக தனியான பிரிவை அமைத்துச் செயற்படுகின்றது. கிட்டத்தட்ட மூன்று இலட்சம் சிறுவர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கின்றது. இவ்வளவு எண்ணிக்கையில் சிறுவர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது குறித்து மானிட வாழ்வின் மீது அக்கறையுள்ள ஒவ்வொருவரும் கவனம் கெள்வது அவசியம். வாழ்க்கையின் குதூகலப் பருவத்தில் இன்பமும் இனிமையும் பொங்கித் ததும்பும் புத்திளம் பருவத்தில் மகிழ்ச்சியின் முழுவடிவமாக திகழ வேண்டிய சிறுவர்கள் ஆயுதங்களை ஏந்தியவர்களாகவும் இரத்தத்தில சிதறி மாள்பவர்களாவும் அமைவது குறித்து முழு உலகமும் வெட்கப்பட வேண்டும். குற்ற உணர்வால் குறுக வேண்டும்.

சிறீலங்கா படைகளுடனான யுத்தத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் சிறுவர்கள் பங்கு கொண்டும் தமது உயிர்களை அர்ப்பணித்தும் வந்திருக்கின்ற நிலைமை ஏற்பட்டதில் தமிழ் தேசத்தின் புரட்சிகர கட்சி என்ற வகையில் நாமும் பொறுப்பெடுக்கிறோம். இவ்வாறான கொடிய நிலைமை எமது சிறுவர்களுக்கு ஏற்பட்டிருப்பதற்காக நாமும் வெட்கித் தலை குனிகிறோம். இந்நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும் என நாம் கோருகிறோம். இன்றைய யுத்தத்தில் எமது சிறுவர்கள் நேரடியாக பங்கு கொள்கின்ற நிலை உடனடியாகவும் முற்றாகவும் தவிர்க்கப்பட வேண்டும். எனினும் எமது சுயவிமர்சனமும் குற்ற உணர்வும் இந்த சர்வதேச நிறுவனங்களின் அக்கறையை ஒத்தவையல்ல. உலகெங்கிலும் கோடிக்கணக்கான சிறுவர்கள் வறுமை, நோய் பொருளாதார மற்றும் பாலியல் சுரண்டல், பொருளாதாரத் தடைகள் யுத்த அழிவுகள்... போன்றவற்றால் பாதிக்கப்பட்டும் இறந்து கொண்டும் இருக்கையில் போரில் ஈடுபடுத்தப்படுகின்ற சிறுவர்களின் உரிமையில் மட்டும் இவர்கள் காட்டுகின்ற அக்கறையின் நேர்மையை நாம் அறிவோம். சிறுவர்களை ஆயுதம் ஏந்தும்படி நிர்ப்பந்தித்த யுத்தத்தின் தோற்றுவாயில் அக்கறை கொள்ளாமல் அந்தச் சிறுவர்களின் வாழ்க்கையில் இவர்கள் கொண்டிருக்கின்ற அனுதாபத்தின் ஆழத்தை நாம் அறிவோம். யுத்தம் என்பது சிலரின் விருப்பத்தினால் - யுத்தவெறியினால் நிகழ்த்தப்படுவதில்லை. மாறாக பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார காரணிகளின் சேர்க்கையினால் யுத்தம் தோற்றுவிக்கப்படுகின்றது. அதே போன்று ஒருவர் யுத்தத்தில் பங்கு கொள்வதும் கூட அவரின் ஆசையினால் நிகழ்வதில்லை. யுத்தத்தின் கோர விளைவுகள் ஒருவரைத் தாக்கும் போது அதன் கொடிய சூழலுக்குள் அவர் சிக்கித் திணறும் போது யுத்தத்தில் பங்கு கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது. எமது சிறுவர்கள் யுத்தத்தில் ஈடுபடுகின்ற நிலையைத் தோற்றுவித்ததற்கான முழுப்பொறுப்பையும் சிறீலங்கா அரசே ஏற்க வேண்டும். இந்த அரசு தமிழீழத்தின் மீது கோரமான ஆக்கிரமிப்பு யுத்தத்தையும் பொருளாதார தடைகளையும் மேற்கொண்டு ஆயிரக்கணக்கான தமிழ் சிறுவர்களை அநாதைகளாக்கியதோடு பலநூற்றுக்கணக்கில் அவர்களைக் கொன்று குவித்தும் வருகின்றது. குண்டு வீச்சுகளினால் மட்டுமன்றி திட்டமிட்டரீதியிலும் சிறீலங்கா படைகள் தமிழ் சிறுவர்களை மிலேச்சத் த ன மாக கொன்றொழித்து வருகின்ற நிலையில் தமது இருப்பைப் பாதுகாப்பதற்கு தமிழ் சிறுவர்களின் முன்னுள்ள பிரதான தெரிவாக யுத்தத்தில் ஈடுபடுவதே அமைந்திருக்கின்றது. பாடசாலைகளிலும் மதத்தளங்களிலும் குண்டுகள் வீசியும் வீதிகளில் செல்கின்ற சிறுவர்களை துப்பாக்கியாலும் ஈவிரக்கமின்றி கொன்று வருகின்ற சிறீலங்கா படைகளிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக தமிழ்சிறுவர்கள் துப்பாக்கி ஏந்தியிருப்பது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல அவசியமானதும் கூட. ஒருபுறம் நூற்றுக் கணக்கான தமிழ் சிறுவர்களை யுத்த முனைக்குள் தள்ளி விட்டும் மறுபுறம் ஆயிரக்கணக்கான சிங்கள சிறுவர்களை பாலியல் மற்றும் அனைத்து சுரண்டலுக்கும், அடக்குமுறைகளுக்கும் உட்படுத்தி விட்டும் இருக்கின்ற சிறீலங்கா அரசுக்கு தமிழ் சிறுவர்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுவது குறித்து கரிசனை கொள்வதற்கு எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது. சிங்கள மற்றும் தமிழ் சிறுவர்களின் உடலையும் உதிரத்தையும் விலையாகக் கொடுத்து தமது நலன்களையும் அதிகாரத்தையும் பேணிவருகின்ற தரகு முதலாளித்துவ அரசியல் கழிசடைகளும் இராணுவ அதிகாரிகளும் தமிழ் சிறுவர்கள் பலவந்தமாக யுத்தத்தில் ஈடுபடுத் தப் படுவதாக பிரச்சாரம்



செய் வது தமிழீழத்தில் தாம் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்திலிருந்து சர்வதேச சமூகங்களின் கவனத்தை திசை திருப்புவதற்கான தந்திரமே தவிர வேறொன்றுமல்ல. இவ்வாறு கூறுவதன் மூலம் தமிழ் சிறுவர்கள் யுத்தத்தில் பங்கு கொள்வதை நாம் நியாயப்படுத்தி அங்கீகரிக்கின்றோம் என்று அர்த்தம் அல்ல. யுத்தத்தில் சிறுவர்கள் பங்கு கொள்வதை நாம் ஆதரிக்கவில்லை. அதை நியாயப்ப டுத்தவு மில்லை. எனினும் வெறுமனே இந்நிலையைக் கண்டிப்பதால் மட்டும் இது தீர்ந்து விடப் போவதில்லை. இதற்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டு கொள்வதால் மட்டுமே இதைத்தீர்க்க முடியும்.

சிறீலங்கா படைகள் தமிழீழத்தை ஆக்கிரமித்து தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து அவர்கள் மீது கொடிய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டிருப்பதே இந்நிலை தோன்றுவதற்கான மூலகாரணம். எனினும் உக்கிரமான கட்டத்தை அடைந்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் தேச்த்தின் புரட்சிகர முற்போக்கு ஜனநாயகப் பிரிவினர் முழுமையாகவும் பிரக்ஞைபூர்வமாகவும் பங்குபற்றாதிருப்பதும் இதற்கான முக்கிய காரணம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் முற்போக்கு தலைமை எனக் கூறிக் கொண்டவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தவறான அராஜகம் சூழ்ந்த பாதையில் இட்டுச் சென்றதோடு இன்று இன்று விடுதலைப் போராட்டத்தை துறந்தோடி விட்டனர். மறுபுறம் இத்தகைய செயல்களில் ஈடுபட்டிராத பழைய மற்றும் புதிய தலைமுறையைச் சார்ந்த பிரிவினர் இப்போராட்டம் குறித்து தவறான அல்லது எதிரான மனோபாவங்களைக் கொண்டிருக்கிறார்கள். இதன் விளைவாக இவர்கள் போராட்டத்தில் இருந்து ஒதுங்கியிருக்கின்றார்கள். எனினும் சிறீலங்கா அரசினதும் அதன் படைகளினதும் யுத்த முன்னெடுப்புகளும் இன ஒழிப்பு நடவடிக்கைகளும் மேலும் மேலும் தீவிரமடைந்தே வந்திருக்கின்றன. இவ்வாறான சூழலில் தமிழ் சிறுவர்கள் தமது தேசத்தின் பாதுகாப்பை தங்கள் பிஞ்சுக் கரங்களில் சுமக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இத்தகைய நிலை இனியும் நீடிப்பதை தமிழ் தேசம் அனுமதிக்கக் கூடாது. தனது இளந் தலைமுறையை, எதிர்கால சந்ததியை பலி கொடுத்து விட்டு ஒரு தேசம் தனது வரலாற்று இருப்பைப் பேண முடியாது. இந்த உண்மை எமது மூளைகளில் உரத்து பதியப்பட வேண்டும். எமது தேசத்தின் நிகழ்கால இருப்பை மட்டுமல்ல அதன் எதிர்கால தொடர்ச்சியையும் நாம் உறுதிப்படுத்த வேண்டும். இதந்கான ஒரே மார்க்கம் தமிழ் தேச புரட்சிகர முற்போக்கு ஜனநாயக பிரிவினர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் -யுத்தமும் அடங்கலாக- பிரக்ஞை பூர்வமாகவும் புரட்சிகரமாகவும் பங்கேற்பதுதான். இதன் மூலமாக மட்டுமே எமது சிறுவர்கள் யுத்தத்தில் பங்கு கொள்வதை நாம் தவிர்க்க முடியும்.

தமிழ்தேச புரட்சிகர முற்போக்கு ஜனநாயக பிரிவினர்களே. வரலாறு நம்மீது பொறுப்பாக்கியுள்ள மாபெரும் கடமையினை புரிந்து கொள்வோம். சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து எம் தேசத்தை விடுவித்தாலன்றி சுதந்திரப் பிரஜைகளாக எம்மால் முன்னேற முடியாது என்ற உண்மையை புரிந்து கொள்வோம். எமது சுதந்திர தாயகத்தில்-தமிழீழத்தில்-முற்றிலும் புதிய முற்போக்கான ஜனநாயக சூழலை ஏற்படுத்துவோம். அங்கு எமது சிறுவர்கள் தமது வாழ்வை தமக்குரிய விதத்தில் தேர்ந்து கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குவோம்.

# சேயும், ஆயுதப் போராட்டத்திற்கான தந்திரோபாயங்களும்

இன்று, சேயின் பங்களிப்புகளில் மிகக்குறைந்த முக்கியத்துவம் பெறுகின்ற தளமாக, பெரிதும் இராணுவ தந்திரோபயங்களே அமைகின்றன. கியூபாவில் அவரது கெரில்லா முறை வெற்றி பெற்றதற்கு பிரதானமாக, நகரங்களில் ஏற்கனவே நிலவிய வெகுஜன அமைப்பு, குறிப்பிட்ட பிராந்தியங்களில் விவசாயிகள் அடைந்திருந்த வரலாற்று ரீதியிலான அரசியல் மயமாக்கம், மற்றும் பிடல் கஷ்ட்ரோவின் மூலோபாய ஆற்றல் என்பவையே அடிப்படையாக அமைந்திருந்தன.

கொங்கோ மற்றும் பொலிவியாவில் சேயினுடைய சொந்த அனுபவங்கள், அதிகாரத்தை வென்று கொள்வதற்கான போராட்டத்தை நிலை நிறுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட வெற்றியடையாத முயற்சிகளாகவே பெரிதும் அமைந்திருந்தன.

இவ்வாற கூறுவது, ஆயுதப் போராட்டமென்பது ஒரு வெற்றிகரமான மூலோபாயமாக இருக்கவில்லை என்ற அர்த்தத்தில் அல்ல. (வியட்நாம், நிக்கரகுவா, கியூபா, சீனா, மொஸாம்பிக் போன்றவை ), மேலும், முக்கியத்துவம் பெற்ற, ஆயுத ரீதியான வெகுஜன இயக்கங்கள் இன்று நிலவவில்லை என்பது கூறுவதாகவும் அமையாது. (கொலம்பியாவில் FARC, மெக்ஸிக்கோவில் ஸபாடிஸ்டா, ஸயரில் கபீலா போன்றவை). இத்தகைய தளங்களில், சேயின் எழுத்துக்களுக்கு உள்ள முக்கியத்துவம் என்ன? வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக என்ன எஞ்சியிருக்கின்றது என்பவை குறித்த விளக்குகின்றபோது ஒருவர் அவதானமாக இருக்க வேண்டும்.

முதலாவதாக, ஆயுதப் போராட்டம் அவசியமானதாக அமைந்த நிலைமைகளை சே விளக்கினார்: சர்வாதிகாரம் (ஸபாடிஸ்டாவின், கியூபா, பரியன்டோவின் பொலிவியா), ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு (வியட்நாம், கௌதமாலா), கொலனித்துவ-நவ கொலனித்துவ சர்வாதிகாரம் (கொங்கோ, ஸயர்..), இன்று இத்தகைய நிலைமைகளில் சில, லத்தீன் அமெரிக்க நாடுகள் சிலவற்றில் காணப்படுகின்றன. (பெரு, கொலம்பியா, மெக்ஸிக்கோ) லத்தீன் அமெரிக்காவில், உதாரணமாக கொலம்பியா தேர்தல் முகமூடியைக் கொண்டிருந்த போதிலும், நாட்டின் மிகப் பெரும்பகுதியை இராணுவமும், கொலைக் கும்பலும் ஆட்சி செலுத்துகின்ற ஒரு பயங்கரவாத அரசாகவே அது இருக்கின்றது. மெக்ஸிக்கோவின் PRI என்பது, எதிரிகளைப் படுகொலை செய்கின்ற, தேர்தல்களை இல்லாமல் செய்கின்ற கட்சி-அரசு சர்வாதிகாரமாகவே இருக்கின்றது. பெருவானது சிவிலியன் - இராணுவ சர்வாதிகாரத்தினால் ஆளப்படுகின்றது. இரண்டாவதாக, முதலாளித்துவ ஜனநாயகத்தின் எல்லைகளை சே உணர்ந்திருந்தார், தமது அடிப்படை பொருளாதார நலன்களுக்கு எதிராக அமைகின்ற தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்வதில் முதலாளிகளுக்குள்ள விருப்பம் குறித்து சே கேள்வி எழுப்பினார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் பொறுத்தவரையில் அது, தனது முதலீடுகள், கடன் வசூலிப்பு, மற்றும் சந்தை வாய்ப்புகளுக்கு எதிராகப் போகின்ற ஜனநாயகங்களை ஏற்றுக் கொள்ளுமா என்பது குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். இவ்வாறான நிலைமைகளில் சேயின் நிலைப்பாடானது, அமெரிக்க இராணுவம், ஜனநாயகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அலெண்டே (Allende) ஆட்சியைத் தூக்கியெறியும் என எதிர்பார்த்ததாக இருந்தது.

சேயின் இந்த அவதானங்கள், அவரது ஆயுதப் போராட்டக் கண்ணோட்டத்திற்குரிய அடிப்படைகளை அமைத்தன, இவை இன்று விவாதத்திற்கும், கலந்துரையாடலுக்குமுரிய திறந்த விடயங்களாகத் தொடர்கின்றன.

வெகுஜன இயக்கங்களுடன், ஆயுதப் போராட்டத்திற்குள்ள உறவுபற்றிய அவரது கருத்தாக்கம் முக்கியத்துவம் குறைந்ததாக இருக்கின்றது. கியூபாவில் கூட, நகர்ப்புறப் போராட்டம் மற்றும் அதன் ஆதரவுப் பின்னல்களின் ஆழ்ந்த முக்கியத்துவம் பற்றி, சே குறைத்து மதிப்பிட்டார், தவறாகப் புரிந்து கொண்டார். இது குறித்து, அவர் இறுதியாக பொலிவியாவில் அவரது முயற்சிகள் தோல்வியடைந்த போது தான் புரிந்து கொண்டார்.

கொங்கோ, பொலிவியா, ஆர்ஜன்டீனா, மற்றும் பெருவில், போராட்டத்திற்காக சே தெரிவு செய்த இடங்களும், இத்தகைய செயற்பாட்டுத் தளங்களில் நிலவிய சக்திகளின் குறிப்பான உறவுகள் பற்றிய அவரது பரிசீலனையும் முற்றிலும் தவறானவையாக இருந்தன. தகவல்களைப் பெறுவதற்காக, வேற்று நபர்களிலும் (Second hand Sources) பொதுவான மதிப்பீடுகளிலும் அவர் தங்கியிருந்ததானது, பற்றாக்குறை மிக்க முறையியலாக இருந்தது. உள்ளூர் மக்களின் அகநிலை குறித்தும், எங்கெங்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள் என்பது குறித்தும் அவர் கொண்டிருந்த மதிப்பீடு பிழையானதாக இருந்தது. ஒரே வார்த்தையில் கூறினால், அவர் கெரில்லா யுத்தத்திற்கான ஒரு மாதிரியை முறைப்படுத்துவதற்கு முயற்சித்தார் (கியூபாவில் பெற்ற தவறான மதிப்பீடுகளின் அடிப்படையில்) இம்மாதிரியை வேறுவிதமான நாடுகளில் பரீட்சிப்பதற்கு அவர் முயற்சித்தார். இம்முறையானது தவறானதாக இருந்தது, இதன் விளைவுகள் கடுமையாக இருந்தன.

இந்த அர்த்தத்தில், தற்கால புரட்சிகர இயக்கங்கள், சேயின் புரட்சிகர போதனைகளைக் கடந்து செல்வதற்கும், அப்போதனைகளுடன் புதியவற்றை இணைப்பதற்கும் ஏராளமான தந்திரோபாய சாதகங்களையும் சிறந்த அனுபவங்களையும் பெற்றிருக்கின்றன. இன்னொரு விதமாகக் கூறினால், சேகுவாராவின் உயிர் வாழும் சிந்தனைகள், அவருடைய சிறப்பு வாய்ந்த பொதுப் பகுப்பாய்வு, கோட்பாடு மற்றும் நடைமுறை குறித்த விமர்சனபூர்வமான வெளிப்பாடுகள் என்பவற்றுக்கும் தனிப் பெறுமதியுண்டு. இன்று லத்தீன் அமெரிக்க புதிய புரட்சிகர இயக்கங்களினால் வளர்த்தெடுக்கப்பட்டு படைப்பாற்றல்மிக்க மூலோபாயக் கண்ணோட்டம், ஆழ்ந்த புரிதலுடன் கூடிய செயற்பாடுகள் என்பவற்றுக்கும் இடையே படைப்பாற்றல்மிக்க (Creative), விமர்சன பூர்மான உரையாடல் இருக்க வேண்டும், இருக்க முடியும்.

**'சேகுவேராவும், தற்கால புரட்சிகர இயக்கங்களும்' எனும் தலைப்பில் ஜேம்ஸ் பெட்ராஸ் எழுதிய ஆங்கிலக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி இது.**

## பெண் விடுதலை.... (6ஆம் பககத் தொடர்ச்சி)

இவ்வகையில் தேசிய விடுதலைப் போராட்டக் காலகட்டமானது பெண்கள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு மிகவும் சாதகமானதாயுள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்ப் பெண்கள் தம்மை அமைப்பாக்கவும், நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் பெண்விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவும், ஏனைய அடக்கப்பட்ட சமூக சக்திகளின் போராட்டங்களுக்கு வழிகாட்டியாயிருக்கவும் முன்வர வேண்டும். பெண்கள் எம்மைப் பொறுத்தவரையில் நாம் திக்குத் தெரியாத நிலையிலிருந்தோ சூனியத்திலிருந்தோ எமது போராட்டத்தைத் தொடங்கவில்லை. பெண்விடுதலைக்கான படிப்பினைகளை சர்வதேச அளவிலும் எமது போராட்ட சூழலினூடாகவும் நாம் நிறையவே சுவீகரித்துக் கொள்ளக் கூடியதாயுள்ளது. சர்வதேச ரீதியில் முன்னணியில் திகழும் போராட்டமாக எமது தேசவிடுதலைப் போராட்டமுள்ளது. போர்க்குணாம்சமும் ஆளுமையுமிக்க பெண்கள் இப் போராட்டத்தினூடாக உருப்பெற்றுள்ளனர். அது மாத்திரமின்றி, தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் புலம் பெயர்வானது எமது பெண்களிடம் சமூகம் பற்றிய புதிய பார்வையை ஏற்படுத்தியிருப்பதுடன் கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்ப அறிவு, திறன் விருத்தி... போன்ற வளங்களை பெண்கள் பெற்றுக்கொள்ளக் காரணமாகியுள்ளது. இவ்வரிய வளங்களையும் வாய்ப்புகளையும் பெற்றிருக்கும் நாம் மிகவும் தாக்கமிக்க போராட்டத்தை நடாத்துவதற்கான உள்ளாற்றலைக் கொண்டவர்களாயிருக்கிறோம். எமக்கேயான மிகவும் விரிவான பெண்ணிய இயக்கத்தைக் கட்டியெழுப்பி எந்நிலையிலும் ஆணாதிக்கத்திற்கு சரணடையாத, விட்டுக் கொடுக்காத போராட்டத்தை முன்னெடுப்போம்.

எமது தேச விடுதலைப் போராட்டத்தில் மேலோங்கியிருக்கும் ஆணாதிக்கப் போக்குகளை துல்லியமாக இனங்கண்டு அவற்றிற்கெதிராக தயக்கமின்றி போராடுவோம். தேச விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு பற்றுதல் வெறும் எண்ணிக்கை ரீதியாக அளவிடப்படுவதற்குப் பதில், பிரக்ஞைபூர்வமாக பெண்கள் தேசப் போராட்டத்தில் தமது ஆளுமையை நிலைநாட்டவும், போராட்டத்தின் திசைவழியைத் தீர்மானிக்கும் சக்திகளாக பெண்கள் மாறுவதற்குமான அடித்தளத்தை அமைப்போம். தமிழீழத்தில் உருவாகும் ஜனநாயகக் குடியரசு பெண்ணிய அரசாயும் இருப்பதை உத்தரவாதப்படுத்துவோம்.

## சிங்களப் படை...

(6ஆம் பககத் தொடர்ச்சி)

மக்களுக்கெதிராகவே செயற்படும் துர்ப்பாக்கிய நிலைக்கு இவர்களைத் தள்ளிவிட்ட அரசியல் சமூகக் காரணிகளை நாம் புறக்கணித்துவிட முடியாது. இவர்கள் மாத்திரமல்ல தேசத்தின் இன்னும் பல இளைஞர்கள் எதிர்காலத்தில் அரசபடைகளுடன் இணையப் போவதை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்தப்போகிறோம்? துரோகிகள் என முத்திரை குத்துவதுடன் நமது பணி முடிந்துவிடுமா? அல்லது அனைவரும் தமது தேசத்தின் விடுதலைக்குப் பங்களிக்கக் கூடிய, விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றக் கூடிய ஜனநாயகமான அரசியல் சூழலை உருவாக்கப் போகிறோமா?

அது மாத்திரமன்றி சிங்கள இராணுவத்தில் எண்ணிக்கை அளவில் எத்தனை தான் சிங்களமல்லாதவர் இணைந்தாலும் அது சிங்கள இராணுவம் இல்லை என்றாகிவிடாது. அது திட்டமிட்டு தமிழ்தேசத்தை வேட்டடையாடுவதும், தமிழீழ வளங்களை அழிப்பதும், தமிழ்ப் பெண்களை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்குவதும், நின்று விடப்போவதில்லை. இவையாவும் வெறும் எண்ணிக்கையால் தீர்மானிக்கப்படுபவையல்ல. மாறாக சிங்களப் பேரினவாத அரச கட்டமைப்பின் பண்பே இவற்றினைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நாம் மறக்காதிருப்போம்.

# தமிழீழம்

**தமிழீழ குடியரசின்றேல் நமக்கு வாழ்வில்லை!**

'The Editor'
BM Box 4002
London. WC1N 3XX
United Kingdom

புரட்சிகர வணக்கங்கள்,

'தமிழீழ மக்கள் கட்சி'யின் அரசியல் ஏடான 'தமிழீழம்' இரண்டாவது இதழ் இம்முறையும் வெற்றிகரமாக உங்கள் கரங்களை அடைந்து விட்டது. எமது கட்சியின் பிரகடனச் செய்தி ஏந்திய இதழ் ஒன்று குறைந்த எண்ணிக்கையிலாயினும் தாயகத்திலும் மற்றும் உலகெங்கும் வாழ் எமது மக்களையும், முற்போக்கு, ஜனநாயக சக்திகளையும் சென்றடைந்து விட்டது. தளத்திலும், சிறிலங்காவிலும், தமிழகத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் எமது கட்சியின் கொள்கைகளை எமது கட்சியின் அரசியல் ஏடு பிரகடனம் செய்துள்ளது. தொடர்ந்தும் உங்களின் பூரண ஒத்துழைப்புடன் எமது கொள்கைகளை வெளிக்கொண்டு வரும்.

தற்போது நமது மக்கள் மத்தியிலும் போராட்டத்தை தலைமை தாங்கி நடாத்த வல்ல பிரிவினர் மத்தியிலும் வெளிப்படையாகவே ஒருவித நம்பிக்கையீனம் ஆதிக்கம் செலுத்துவதை அறிவோம். இருந்தும் தேசிய விடுதலையின் அவசியத்தை மேலும் தீவிரமாக வலியுறுத்தும் யதார்த்த நிலைமையை அன்றாடம் நாம் எதிர் கொள்கின்றோம்.

அடக்குமுறைகளின் தளைகளை தகர்த்து, பழைமைகளை நிலைமறுத்து முன்னேற நமது தேசம் பலதசாப்தங்களாக போராடிக்கொண்டிருகின்றது. உலகிலுள்ள சக தேசங்களுக்கு இணையாக தன்னை நிலைநாட்டவும் தனது ஆற்றலை நிருபிக்கவும் விளைகிறது. இருந்தும் சிங்கள அரசும் ஆளும் குழுமமும் தமது நலன்களை அடைய நம்மீது சொல்லொனா அட்டூழியங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. இன அழிப்பு வரை.

.....

நமது தாயகத்தில் நமக்கேயுரிய உரிமைகளையும் வளங்களையும் அனுபவிப்பதை படைபலம் கொண்டு சிங்கள அரசு தடைசெய்கிறது. அன்றாடம் படுகொலைகளும் புதைகுழிகளும், வதை முகாம்களும் சித்திரை வதைகளும், அன்றாடம் மண் ஆக்கிரமிப்பு, வாழ்வதற்கு எஞ்சியுள்ள அற்ப வாய்ப்புகளையும் பிடுங்குதல், அவமானப்படுத்தல்கள் யாவும் முன்னெப்போதையும் விட பன்மடங்காகியுள்ளது.

மீட்சிக்கு வழியின்றி கொந்தளிக்கின்றது மக்களின் மனங்கள். போராட வேண்டியவர்கள் இடம்பெயர்கின்றனர், தூர தேசங்களுக்கு புலம்பெயர்கின்றனர். போகுமிடங்களும் சொர்க்கமல்ல, அங்கும் அடிமை வாழ்வின் எச்சங்கள். அதட்டலும் மிரட்டலும் அவமானப்படுத்தல்களும் சிறைவைப்புகளும்.

தாயகத்தில் போராட்டம் நீடிக்கின்றது. தமிழ் தேசத்தின் வளங்கள் அருகிவருவதாக எதிரிகள் குதூகளிக்கின்றனர். மிக விரைவிலேயே போராட்டத்தை நசுக்கித் தகர்த்து விடலாம் என கனவு காண்கின்றனர். வரலாறு என்றாவது பின்னோக்கி சென்றதுண்டா? விடுதலையை துரிதப்படுத்தி வரலாற்றை முன்னோக்கி உந்துவது நமது கரங்களில்தான் உள்ளது. முன்னணி படையாகிய புரட்சிகர கட்சியை கட்டுவது எமது கடமை. அதற்கான அடியை நாம் எடுத்து வைத்துள்ளோம். விடாப்பிடியாக நடைபோடுவோம். அரசியல் மற்றும் ஆயுதப்போராட்டங்களை தலைமை தாங்கி முன்னெடுத்துச்செல்வதும் இதற்கான முன்னணி படையைக்கட்டுவதும் கட்சியின் கடமை. ஒட்டுமொத்த புரட்சியை நிகழ்த்தி சுதந்திர தமிழீழ குடியரசை நிறுவுவது ஈழத்தமிழரின் வரலாற்றுக்கடமை.

தேசத்தின் அனைத்து வளங்களையும் போராட்ட சக்திகளையும் ஒன்று திரட்டி விட்டுக்கொடாது போராடுவோம். போராட்டம் இன்னும் நீண்டு நெடியதுதான். தமிழீழ விடுதலையை வென்றெடுக்க ஒன்றிணைந்து இன்னும் உறுதியுடன் போராடுவோம். இலட்சியத்தை அடைவோம்.

சென்ற முறை போல இம்முறையும் மிகுந்த ஆபத்துகளுக்கு மத்தியில் இப்பத்திரிகை உங்கள் கரங்களை வந்தடைந்துள்ளது. ஆழமாக படியுங்கள், சகாக்களுக்கும் படிக்ககொடுத்து விவாதியுங்கள், முடிந்தால் பிரதிகள் எடுத்து ஆர்வலர்களுக்கு வினியோகியுங்கள். அனுபவங்களையும் கருத்துக்களையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள். தவறுகளை விமர்சியுங்கள். பல நூறு தடைகளையும் மீறி மீண்டும் சந்திப்போம்.

ஆசிரியர்குழு

15-05-99

## மக்கள் களம் —

- கடந்த பதினைந்து வருடங்களாக தலைமறைவாக செயற்பட்டதாக கூறுகின்றீர்கள். பல கோட்பாட்டு மற்றும் அரசியல் கருத்துப் பிரச்சனைகளை களைந்து தீர்த்து வந்ததாக கூறுகின்றீர்கள். ஆனால் உங்களை அறிமுகம் செய்த அதாவது எங்களின் கடந்தகால வரலாற்றை கூறிய தமிழீழம் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் முஸ்லிம் தேசம் மற்றும் மலையக தேசம் தொடர்பான உங்கள் அரசியல் நிலைப்பாட்டைக் கூறவில்லை. ஒரு வார்த்தை தானும் கூறவில்லை. இந்தப் புறக்கணிப்ப ஏன்? இதுவா இதுவரை நீங்கள் செய்ததாக கூறும் வேலையின் பலாபலன்?

கணேஸ்- கனடா

- பார்த்தவுடன் கவரவில்லை. இன்னும் எளிமையாக்கலாம். கேள்விகளை நீங்களே வரவேற்றிருக்கலாம். ஜனரஞ்சக தன்மை குறைந்து காணப்படுகின்றது. மற்றும் படி நன்றாக உள்ளது.

வசந்தம்- கனடா

- புதிய சக்தி ஒன்றின் தேவை எமது விடுதலைப்போராட்டத்தின் அரசியலைப் பொறுத்தவரை தேவைப்படுகின்றது. இச் சக்தி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப்போராட்டத்தை குழப்பாதவகையில் அதற்கு ஊறுவிளைவிக்காதவகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும். விடுதலைக்காகப் போராடும் சக்திகள் ஐக்கியப்பட்டு போராடுவது இன்றைய நிலையில் விடுதலைப் போராட்டத்தை அரசியல் அடிப்படையில் மேலும் முன்னே கொண்டு செல்ல உதவும்.

சிறி - கனடா

- புலிகள் தொடர்பான் உங்களின் நிலைப்பாட்டை முன்வைக்கவில்லையே. என்ன பயமா? அல்லது நிலைப்பாடே இல்லையா? ஏன் பூசி மெழுகி இதுதொடர்பாக மட்டும் கதைத்துள்ளீர்கள். அவர்கள் தொடர்பான பல்வேறு விமர்சனங்கள் நிலவிய போதும் அது தொடர்பாக நீங்கள் ஒரு வார்த்தைதானும் கூறாதது ஏன்?

ராஜா - கனடா

- கடந்தகால புரட்சிகர அமைப்புகளில் நிலவிய முக்கியமான பிரச்சனை உட் கட்சி மற்றும் வெளி ஜனநாயம் தொடர்பானது. இது தொடர்பான கூடிய அக்கறை இருப்பது நல்லது. பெரும் பிரச்சினைகள் இங்கு தான் ஆரம்பிக்கும்.

மாதேவி - கனடா

- புதிய சக்தி ஒன்றின் தேவை ஏன்? போராட்டத்திற்கு எப்படியான பங்களிப்பை வழங்கப் போகின்றீர்கள். புலிகள் இன்று போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். இதைவிட வேறு நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்.

மூர்த்தி - லண்டன்

- புதிய சக்தி ஒன்றின் தேவை அதிகமாகவே எமது போராட்டத்தைப் பொறுத்தவரை உள்ளது. உங்களையும் இந்த முயற்சியையும் வரவேற்கின்றோம். போராட்டத்தை தனியொரு அமைப்பாலும் முன்னெடுக்க முடியாது. விடுதல்யை பெறவும் முடியாது. பன்முகத்தன்மை வாய்ந்த கூட்டுச் சக்தி மூலமே தேசியளவிலும் சர்வதேசளவிலும் போராட்டத்தை மேலும் அரசியல் மற்றும் ஆயுதரீதியாக மேம்பட்ட நிலைக்கு கொண்டு செல்லலாம்.

- பல குரல்கள் கனடா லண்டன் சுவிஸ் பிரான்ஸ் ஜெர்மனி நோர்வே அவுஸ்ரேலியா இந்தியா சிறிலங்கா தமிழீழம்

*அன்பார்ந்த வாசக நண்பர்களே! தங்களது கடிதங்கள் எம்மை உற்சாகப்படுத்துகின்றன. எமக்கு உரமூட்டுகின்றன. எனினும் இடப்பற்றாக்குறை காரணமாக அவை அனைத்தையும் இங்கு பிரசுரிக்க முடியாமைக்காக வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம். நீங்கள் எழுப்பியுள்ள கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதிலளிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம் என்றபோதும் இப்பத்திரிகைக் கூடாக அதைச் செய்து முடித்திட முடியாது என்பதை நீங்களும் அறிவீர்கள். நீங்கள் விரும்பினால் எமது கட்சியின் பிரதிநிதியூடாக நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ தொடர்பு கொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.*

*- மலையகத் தமிழ் தேசம், முஸ்லிம் தேசம் தொர்டர்பான எமது கட்சி நிலைப்பாட்டை எமது அரசியல் திட்டத்தில் தெளிவாக முன்வைத்துள்ளோம். அது விரைவில் தங்களை வந்தடையும்.*

*- முஸ்லிம் தேசம் தொடர்பான எமது கொள்கை நிலைப்பாட்டை*

*உயிர்ப்பு வெது இதழில் முஸ்லிம் தேசமும் எதிர்காலமும் எனும் விரிவான ஆவணமாக வெளியிட்டுள்ளோம்.*

*-ஆசிரியர் குழு*